Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

**Tilko Jaffna City Hotel**
TILKO
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2278)


தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 03 | திருவள்ளுவர் ஆண்டு 2044 | தை 24 | புதன்கிழமை | (06.02.2013) | பக்கங்கள் 20 | ஓசை – 129

















# சர்வதேச விசாரணைக்கு அரசு மசியப்போவதில்லை

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக ஐக்கியநாடுகள் மனித உரிமைப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும் அதன் மூலமாக சர்வதேச விசாரணைகளுக்கு இலங்கையை அழைக்கும் முயற்சிகளுக்கு அரசு ஒருபோதும் ஒத்துழைக்காது என்று வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அமெரிக்காவோ அல்லது வேறு நாடோ இலங்கைக்கு எதிராக மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடரில் யோசனை முன்வைத்தாலும் சுமத்தப்பட்டு வரும் போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த சர்வதேச விசாரணைகளுக்கு இணங்கப்போவதில்லை என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். இலங்கை தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளாது, இது பற்றி சர்வதேச சமூகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ள தரப்பொன்று

(19) ஆம் பக்கம் பார்க்க



## கடலில் தத்தளித்த இந்திய மீனவர்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

படகு விபத்துக்குள்ளானதன் காரணமாக கடலில் தத்தளித்த மூன்று இந்திய மீனவர்களும் நீர்கொழும்பு கடற்பரப்பிலிருந்து பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். இவர்களை இலங்கை மீனவர்கள் நேற்று மீட்டு வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே மீன்பிடி தொழிலுக்காக தம்முடன் வந்த மீனவர் ஒருவர் காணாமல் போயுள்ளதாகவும் குறித்த மீனவர்கள் தெரிவித்துள்ளனர். இதுதவிர தாம் பயணித்த படகு பாரிய அலை காரணமாக நீரில் மூழ்கியதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## ஜனாதிபதி தலைமையில் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச எதிர்வரும் 12 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொளளும் ஜனாதிபதி அன்றையதினம் யாழ். போதனா வைத்தியசாலையின் புதிய கட்டடத்தினை திறந்து வைக்கவுள்ளார். அத்துடன் சாவகச்சேரியில் புதிதாக கட்டப்பட்ட நீதிமன்ற வளாகத்தினையும் திறந்து வைக்கவுள்ளார். இதேவேளை யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஜனாதிபதி தலைமையில் கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரியில இடம்பெறவுள்ளது.

மேலும் ஜனாதிபதியின் வருகையினை முன்னிட்டு எதிர்வரும் 6 ஆம்

(19) ஆம் பக்கம் பார்க்க

## படகு அகதிகளை நாடு கடத்துவது சர்வதேச சட்டத்தை மீறும் செயல்

### ஆஸியின் செயலுக்கு கண்டனம்

அவுஸ்ரேலிய எதிர்க்கட்சியின் புதிய புகலிடக் கோரிக்கையாளர் கொள்கைகள், சர்வதேச சட்டங்களுக்குப் புறம்பானதாக அமையக்கூடுமென ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் சட்ட வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் சகல புகலிடக் கோரிக்கையாளர்களையும் தடுத்துநிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவுஸ்ரேலியா அறிவித்துள்ளது. எதிர்வரும செப்ரெம்பர் மாதம் நடைபெறும் பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் வெற்றியீட்டினால் இலங்கைப் புகலிடக் கோரிக்கை

(19) ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைத் தமிழர் விவகாரம்; அதிக கவனம் செலுத்தப்படும்

### சோனியாகாந்தி சொல்கிறார்

இலங்கை தமிழர் விவகாரம் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் சல்மன் குர்திஹுடன் விசேட பேச்சுவார்த்தை நடத்தப்படும் என இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி தெரிவித்துள்ளார். இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் குறித்து தமிழகத்தின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கருணாநிதி எழுப்பிய கேள்விகளுக்கு சோனியா இவ்வாறு பதிலளித்துள்ளார். இலங்கையில் தமிழ்மக்கள் பல்வேறு அடக்குமுறைகளை எதிர்நோக்கி வருவதாக

(19) ஆம் பக்கம் பார்க்க

## பின்தங்கிய பாடசாலைகளின் தேவைகள் நிறைவு செய்யப்படும்



வடபகுதியில் பின்தங்கியதும் பாதிக்கப்பட்டதுமான பாடசாலைகளின் அத்தியாவசிய மற்றும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவது குறித்தும் பாடசாலைக் கட்டடங்கள் மற்றும் மூலதனச் செலவுகள் தொடர்பாகவும். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியினதும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினதும் கவனத்திற்கும் கொண்டுசென்றுள்ளார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

# கலைத்துறை ஆய்வுக்கு இந்தியா உதவி

### இலங்கை கலைஞர்களுக்கு வாய்ப்பு

பிரபல இந்தி எழுத்தாளர் பிறேமசந்தின் 125 ஆவது பிறந்த தினத்தையொட்டி இந்திய சாகித்திய கல்வி நிதியம் அவருடைய பெயரைக் கொண்டு ஆய்வாளர் நிலையை (fellowship) ஏற்படுத்தி வருடாவருடம் ஒவ்வொரு saarc அங்கத்துவ நாடுகளிலிருந்தும் கலாசாரம், இலக்கியத்துறை திறமை வாய்ந்த ஒருவருக்கு வழங்கி வருகின்றது. ஆய்வாளர் நிலை (fellowship) எழுத்தாளர் துறை ஆய்வாளரின் வசதிக்கேற்ப ஒரு மாதம் தொடக்கம் மூன்று மாத காலமாக இருப்பதோடு சாகித்திய நிலையத்தால் உணவு, தங்குமிடம், சர்வதேசம் பிரயாணம், இந்தியாவிற்குள்ளான பயணம் ஆகியன வழங்கப்படும். மேலதிகமாக மாதாந்தம் கைச்செலவாக இந்திய ரூபா 1200 சிறிய செலவுகளுக்காக வழங்கப்படும். வருகை தரும் ஆய்வு மாணவன், மாணவி தன்னுடைய ஆக்கங்கள் பற்றி

(19) ஆம் பக்கம் பார்க்க

## கூட்டுச்சேரும் எதிர்க்கட்சிகள் சவால்விடும் சக்தியாக மாறுமா?

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு இயக்கத்தில் இடம்பெறும் கட்சிகள் மற்றும் அமைப்புகளுக்கு இடையிலான உடன்பாடுகள் மற்றும் புரிந்துணர்வுகளை நாட்டு மக்களுக்கு அறிவிக்கும் நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை 11 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் எதிர்க்கட்சி எதிர்ப்பியக்கத்தில் பங்குபற்றும் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் முன்னணி பிரமுகர்கள் கலந்துகொள்வார்கள் என ஜனநாயக முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு

(19) ஆம் பக்கம் பார்க்க

## இன்றைய தினமுரசில்...

பிரபாகரன்முன் தலை குனிந்தவாறு நீண்ட நேரம் நிற்கவேண்டி ஏற்பட்டது.

வே. அர்ச்சுணன்



### விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள் 20



# 36 நாட்களில் 69 பேருக்கு டெங்கு; யாழ்.வைத்தியசாலையில் சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரப் பகுதியில் இருந்து நேற்று டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகிய மூவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் இந்த வருடத்தில் இதுவரை யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 69 ஆக அதிகரித்துள்ளதாக வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்று முதல் பரவலாகப் பெய்து வரும் மழையை அடுத்து இந்த நோயின் தாக்கம் மேலும் அதிகரிக்கும் சாத்தியங்கள் தென்படுவதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

எனவே, மக்கள் டெங்கு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக அமையும் பகுதிகளில் துப்புரவுப் பணியினை மேற்கொண்டு நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், இவ்வாறு டெங்குத் தொற்று இனங்காணப்பட்ட பகுதிகளுக்கு சுகாதாரப் பகுதியினரால் புகை அடிக்கப்பட்டு நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (பா)

# இந்து மயானங்களைப் புனரமைக்க நடவடிக்கை

(யாழ்.நிருபர்)

அம்பிகை நகர், துறையூர், சாட்டி போன்ற பிரதேசங்களில் அமைந்துள்ள இந்து மயானங்களைப் புனரமைப்பதற்கு வேலணைப் பிரதேச சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தற்போது இந்த மயானங்களில் போதிய வசதிகள் இல்லாமையால் சடலங்களை எரியூட்டுவதில் சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி மயானங்களில் கொட்டகை வசதியினை ஏற்படுத்துவதுடன், சடலங்களை வைத்து எரியூட்டுவதற்கான மேடை வசதிகள் என்பவற்றை அமைப்பதற்கு வேலணை பிரதேசசபை முன்வந்துள்ளதாக சபையின் உறுப்பினர் சி.க. கருணாகரமூர்த்தி தெரிவித்துள்ளார். (10)



திருமலையில் இடம்பெற்ற இலங்கையின் 65 ஆவது சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொண்டு மீண்டும் யாழ்.திரும்பிக்கொண்டிருந்த ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரினது (உதயன்) வாகனம் விபத்துக்குள்ளானதில் அவர் சிறுகாயங்களுடன் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். யாழ்.வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரையும், காயமடைந்தவர்களையும் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) நேரில் சென்று பார்வையிட்டார்.

# யாழ்ப்பாணம், வன்னிப் பகுதியில் சோளன் பொத்திக்கு கிராக்கி

(யாழ்ப்பாணம்)

வன்னி மற்றும் யாழ்ப்பாணத்தில் சோளன் பொத்தி வியாபாரம் மும்முரமாக நடைபெற்று வருகின்றது. சந்தைகளிலும் பொது மக்கள் கூடும் இடங்களிலும், பயணிகள் பஸ் வண்டிகளிலும் அவித்த சோளன் பொத்தி வியாபாரிகளினால் விற்பனை செய்யப்பட்டு வருவதுடன், அவிக்காத சோளன் பொத்திகளும் எடுத்து வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இவ்வாறு விற்பனை செய்யப்படும் அவிக்காத சோளன் பொத்தி ஒன்று 15 ரூபாவிற்கு மேற்பட யாழ்.நகரில் விற்பனை செய்யப்படுகின்றது.

இதேவேளை, இத்தகைய சோளன் பொத்தி கிளிநொச்சி மாவட்டத்தில் 20 ரூபாவிற்கு மூன்று சோளன் பொத்திகள் என்ற எண்ணிக்கையில் விற்பனை செய்யப்படுகின்றது. இது இவ்வாறு இருக்க அவித்த சோளன் பொத்தி ஒன்று 20 ரூபா முதல் 25 ரூபா வரை யாழ்.நகரில் விற்பனை செய்யப்படுகின்றது. இந்த வகையில் கிளிநொச்சிப் பகுதியில் அவித்த சோளன் பொத்தி விலை குறைவாகவே வியாபாரிகளினால் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



ஒப்பீட்டளவில் வன்னியில் உற்பத்தி செய்யப்படும் சோளன் பொத்திக்கு கிராக்கி ஏற்பட்டிருப்பதனை அவதானிக்க முடிகின்றது. இதேவேளை, யாழ்ப்பாணம், பலாலிப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட சோளன் பொத்திகளும் யாழ்.நகரில் விற்பனைக்கு வந்துள்ளது.

ஒப்பீட்டளவில் வன்னிப் பகுதிகளிலேயே இவை அதிகம் உற்பத்தி செய்யப்பட்டிருப்பதனால் வியாபாரிகள் அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கு சோளன பொத்தியை எடுத்து வந்து விற்பனை செய்வதனால் அதிக இலாபம் ஈட்டக்கூடியதாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சோளன்பொத்தி வியாபாரம் உள்ளூர் மக்களது அபிமானத்தைப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (பா)

# இதழியல் டிப்ளோமா பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படுகின்ற இதழியல் டிப்ளோமா இரண்டாண்டு பயிற்சி நெறிக்காக (2013/2014) புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றவர்கள் இப் பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் இணைய ஊடகம் போன்ற துறைகளில் பயிற்சி வழங்கப்படும்.

கற்கைக் காலம் இரண்டு ஆண்டுகளாகும். இக்கற்கை நெறிக்கான கட்டணம் 20 ஆயிரம் ரூபாவாகும். பதிவுக் கட்டணம் 750 ரூபா, நூலக வைப்புப் பணம் 750 ரூபா, நூலக பயன்பாட்டுக் கட்டணம் 1000 ரூபா ஆகும்.

விண்ணப்பப் படிவங்களை இல. 84 ஜும்மா பள்ளி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் நூறு ரூபா செலுத்திப் பெற்றுக்கொள்ளலாமெனவும், விண்ணப்பங்கள் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன் அனுப்பப்பட வேண்டுமெனவும் யாழ்.பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார். (10)

# மண்டைதீவு வயல்களில் நெல் அறுவடை ஆரம்பம்

(அரியாலை)

மண்டைதீவு தில்லைக்கூடல் பகுதி வயல்களில் தற்போது அறுவடைப் பணிகள் ஆரம்பமாகியுள்ளதுடன், இப்பகுதி விவசாயிகள் கை அரிவாள் கொண்டு அறுவடையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கட்டாக்காலிகளின் தொல்லைகளுக்குப் பயந்து விவசாயிகள் உடனடியாக நெல்லை வாகனங்களில் ஏற்றி வீடுகளுக்கு எடுத்துச் செல்வதை அவதானிக்க முடிகிறது. (23)

# 3 பரப்புக் காணி பாடசாலைக்கு அன்பளிப்பு

(யாழ்.நிருபர்)

லண்டன் கோண்டாவில் நலன்புரிச் சங்கமும், கனடா வாழ் பழைய மாணவர்களும் இணைந்து சுமார் 40 இலட்சம் ரூபா பெறுமதியான 3 பரப்புக் காணியைக் கொள்வனவு செய்து கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்துக்கு வழங்கியுள்ளனர்.

இக்காணி உறுதிப்பத்திரங்கள் கடந்த வாரம் மேற்படி அமைப்புக்களின் பிரதிநிதிகளினால் சம்பிரதாயபூர்வமாக வித்தியாலயத்தின் அதிபர் கே.கே.தவகீஸ்வரனிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (10)

# கூடைப்பந்தாட்ட மைதானம் திறப்பு விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட கூடைப்பந்தாட்ட மைதானம் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

கல்லூரி முதல்வர் த.அருந்தவபாலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மகா என்ஜினியரிங் பிறைவைற் லிமிட்டெட்டின் உதவிப் பொது முகாமையாளர் டி.எம். ஸ்ரீவர்த்தன கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண விளையாட்டுத்துறை முன்னாள் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை மற்றும் மகா என்ஜினியரிங் பிறைவைட் லிமிட்டெட் நிர்மாணித்தல் பகுதி முகாமையாளர் கே.ஜீ. விதானந்தஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (11)



கரியாலை நாகபடுவான் அமெரிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற 2013 ஆண்டுக்கான கால்கோள் விழாவில் முதலாம் தர மாணவர்களுடன் ஆசிரியர்கள் நிற்பதைக் காணலாம். (09)

## அவலநிலையில் மயானம்; அந்தரிக்கின்றனர் மக்கள்

சாவகச்சேரியில் காணப்படும் இந்துக்களின் இறுதிக் கிரிகைகள் ஆற்றப்படும் வேம்பிராய் மயானம் மக்களது பாவனைக்கு உகந்தவாறு இல்லை.

அத்தோடு மயானத்தின் உட்புறத்தில் சடலங்களை எரிக்கும் இடத்தில் கூடாரங்கள் மற்றும் பாதுகாப்புத்தடைகள் இல்லாமல் அப்பகுதி மிகுந்த பற்றைக்காடாக காணப்படுகின்றது.

இந்த மயானத்தை புனரமைத்து மக்களின் பாவனைக்கு ஏற்றவகையில் வழங்க வேண்டும் என சம்பந்தப்பட்டவர்களிடம் அப்பகுதி மக்கள் வினயமாக வேண்டுகின்றனர். (கா)

# டெங்கை ஒழிக்க தீவிரமுயற்சி; நுளம்புக் கட்டுப்பாட்டுவாரம் ஆரம்பம்

## - யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் பல பகுதிகளிலும் பருவகால மழைக்குப் பின்னர் டெங்கு நோயின் பரவல் அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகிறது.

இந்நிலையில் நாடு முழுவதும் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து தீவிரப்படுத்தும் நோக்குடன் மத்திய சுகாதார அமைச்சினால் இன்று 06 ஆம் திகதி முதல் எதிர்வரும் 12 ஆம் திகதி வரையான காலப்பகுதி தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இவ் வாரத்தில் நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப் படவேண்டும் என அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், வைத்தியசாலை பொறுப்பதிகாரிகள், நிறுவனத்தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், வர்த்தக நிலைய உரிமையாளர்கள், டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்துவதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என அவர்கேட்டுள்ளார்.

டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளாக,

பிரதேச செயலாளர் பிரதேசமட்ட டெங்கு தடுப்பு செயலணிக் கூட்டத்தை ஒழுங்கு செய்து பிரதேசத்திலுள்ள நிறுவனங்களையும், கிராம மட்ட அமைப்புக்களையும் இணைத்து நுளம்பு கட்டுப்பாட்டு வார நடவடிக்கைகளை திட்டமிட வேண்டும்.

சுகாதார வைத்திய அதிகாரி இதற்கு ஒருங்கிணைப்பாளராக செயற்பட வேண்டும்.

கிராம மட்ட டெங்கு தடுப்பு செயலணிக் குழுக் கூட்டத்தை கிராம சேவகர் தலைமையில் ஏற்பாடு செய்து கிராம மட்ட அமைப்புக்களை நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டும். பொது சுகாதார பரிசோதகர் இதற்கு ஒழுங்கிணைப்பாளராக செயற்பட வேண்டும்.

ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும் ஏழு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயத்திற்கும் ஒவ்வொரு நாள் ஒதுக்கப்படும்.

குறித்த நாளில் குறித்த வலயத்திற்குட்பட்ட சகல நிறுவனங்களும், வைத்தியசாலைகளும், பொது இடங்களும், வணக்கத்தலங்களும், வர்த்தக நிலையங்களும், வீடுகளும், பராமரிப்பற்ற காணிகளும், நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகட்கு உட்படுத்தப்பட வேண்டும்.

பாடசாலைகளில் தற்போது இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருவதைக் கருத்திற் கொண்டு பெப்ரவரி 6 முதல் 12 வரையிலான வாரத்தில் வசதியான ஒரு நாளைத தெரிவு செய்து மாணவர்களின் உதவியுடன் காலை 2 மணி நேரம் சிரமதானம் மூலம் பாடசாலை வளாகம் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

குறித்த நாளில், குறித்த வலயத்தில் இடம்பெறும் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து ஆலோசனைகளை வழங்குவதற்கு பல் குழுக்கள் வீடுகளையும், நிறுவனங்களையும், பொது இடங்களையும் தரிசிப்பர். இக் குழுக்களில் பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், மலேரியா தடுப்பு வெளிக்கள உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள், கிராம சேவகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பட்டதாரிப் பயிலுனர்கள், உள்ளூராட்சிமன்ற உத்தியோகத்தர்கள், கிராம மட்ட சமூக அமைப்புக்களின் தொண்டர்கள், சுற்றாடல் பாதுகாப்பு பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடவேண்டும்.

இவ் வாரத்தில் ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளப்பட்ட நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பற்றிய விபரங்களையும், அதில் பங்கு பற்றிய உத்தியோகத்தர்களின் விபரங்களையும் சுகாதார வைத்திய அதிகாரி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடாக அரசாங்க அதிபருக்கும், மத்திய, மாகாண சுகாதார அமைச்சுகளிற்கும் தினமும் அனுப்பி வைக்க வேண்டும்.

எனவே யாழ். மாவட்டத்தில் அனைவரும் நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தில் ஒன்றிணைந்து செயற்பட்டு மக்களை ஆட்கொல்லி டெங்கு நோயிலிருந்து பாதுகாக்க அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

## பொதுக்கூட்டம்

புலோலி தென்மேற்கு கந்த முருகேசனார் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் எதிர்வரும் 16 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நிலையத்தலைவர் பா.ரகுநாதன் தலைமையில் நடைபெறும்.

## இளைப்பாறும் மண்டபத்தை புனரமைக்க கோரிக்கை

(அச்சுவேலி)

புத்தூர் கிழக்கு அந்திரானை மயானம் கடந்த 30 வருடமாக திருத்தப்படாமல் இருப்பதாக பிரதேசவாசிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

1000 குடும்பங்களுக்கு உரித்தான இம் மாயானத்தில் இளைப்பாறும் மண்டபம் சேதமடைந்துள்ளதுடன், அங்கு காணப்படும் கிணறும் பாழடைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

புத்தூர் பிரதேசசபை நிர்வகிப்பின் கீழ் காணப்படும் இம் மயானம் திருத்தப்படாமல் இருப்பது தொடர்பாக பிரதேசசபையின் தவிசாளரை வினாவியபோது இம்மயானம் ஒரு முறை திருத்தியும் இங்கு போடப்பட்டிருந்த இரும்பு கேடர்கள் பல திருட்டுப்போயுள்ளன.

இவற்றினை திருத்தமுன் மயானத்தினையும், ஏனைய பொருட்களையும் பாதுகாக்க மக்கள் முன்வரவேண்டும். இந்நிலையில் இவற்றுக்கான பாதுகாப்பு மக்களால் உறுத்திப்படுத்தப்படுமிடத்து இம் மயானத்தினை விரைவில் திருத்த நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்தார். (15)

## ஆங்கில ஆசிரியர் இன்மையால் பாதிப்படையும் மாணவர்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - சிவநகர் தமிழ் வித்தியாலயத்திற்கு நிரந்தரமாக ஆங்கில ஆசிரியர் ஒருவர் இல்லாமையால் இங்கு கல்வி பயிலும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாக மாணவர்களின் பெற்றோர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இப்பாடசாலையில் தரம் 1 முதல் 5 வரையான வகுப்புக்கள் உள்ளதுடன், 56 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

இந்நிலையில் ஆங்கிலப் பாடத்திற்கு நிரந்தர ஆசிரியர் இல்லாமையால் மாணவர்கள் இப்பாடத்தை கற்றமுடியாதுள்ளதாகவும் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

இதில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ஆங்கில அறிவு கட்டாயம் தேவையாகவுள்ள நிலையில், அப்பாடத்தை கற்பிப்பதற்கு ஆங்கில ஆசிரியர் அவசியம் தேவையாகவுள்ளது.

எனவே இப்பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை கருத்திற்கொண்டு நிரந்தர ஆங்கில ஆசிரியரை நியமிக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுக்கொள்கின்றனர். (04)

## யாழ் மத்தியகல்லூரி க.பொ.த.உயர்தர பரீட்சை முடிவுகள்

**கலைப்பிரிவு**

அ.யூட்நிசாந் 3ஏபி, ஆ.வாணன் ஏ,2பி, சி.குருபரநாத் ஏ,2பி, ச.சங்கரநேசன் ஏ,பி,எஸ், துா.ஜெரூஜன் 2பி,எஸ்,சி.கபிலராஜ் ஏ,2சி, அ.நிரோஜன் 2ஏ,சி

**வர்த்தகப்பிரிவு**

ர.நிரோசன் 2ஏ,பி, இ.தனுசன் 2ஏ,பி, த.லக்ஸதன் 2ஏ,பி, ஏ.சிவச்சந்திரன் ஏ,2பி, ச.ஜெபதர்சன் ஏ,பி,சி, சு.கவிசாந்தன் ஏ,பி,சி, உ.கெங்கேசன் 3பி, சி.சாதோக் பி,2சி,

**விஞ்ஞானப்பிரிவு**

ஆர்.பனோஜன் ஏ,2பி, எஸ்.பிரணவன் பி,2சி, ரி.வசீகரன் ஏ,பி,சி, வி.கோவர்த் ஏ,பி,சி, கே.தர்சன் 3பி.

## இந்திய வீட்டுத்திட்டம்; பயனாளிகளுக்கு விளக்கமளிப்பு

மாவிட்டபுரம் தெற்கு ஜே.232 கிராம சேவையாளர் பிரிவில் இந்திய வீட்டுத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான விசேட கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை குறித்த கிராம அலுவலர் பணிமனையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வீட்டுத்திட்டத்திற்கென தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஆரம்பக்கட்டப் பணிகளை ஆரம்பிக்கும் வகையில் விளக்கங்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் உடனடியாக செய்யப்படவேண்டிய வேலைகள் தொடர்பாகவும், பயனாளிகளுக்கும் அறிவித்தல் வழங்கப்பட்டதுடன், பணம் பெறுவது தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

இதேவேளை இக்கிராம அலுவலர் பிரிவிலுள்ள இம் மக்களுக்கு ஆர்.சி. நிறுவனத்தால் தற்காலிக வீடுகள் அமைத்து வழங்கப்படவுள்ளதால், அவற்றிலேயே இம் மக்கள் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் இந்திய வீட்டுத்திட்டத்தின் மூலம் நிரந்தர வீட்டுத்திட்ட வசதிகளை நாம் பெற்றுக்கொள்வது மகிழ்ச்சியளிப்பதாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் தெரிவிக்கின்றனர். (17)

## பூந்தோட்டத்தில் வெளியாகிறது முகிலனின் கவிதைத் தொகுதி


(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு முகிலனின் 10 ஆவது தொகுதியான 'நீ விளையாடுவாய்தானே நான் பொம்மையாகிறேன்' கவிதை நூல் வெளியீட்டுவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.15 மணிக்கு ரில்கோ ஹோட்டல் பூந்தோட்டத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிளிநொச்சி பிராந்திய உதவிப்பணிப்பாளர் த.ஈஸ்வரராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக சூரியன் எவ்.எம்.வானொலியின கொழும்பு தலைமை அதிகாரி திருமதி நவநீதன் ஷம்ஸாநந்தி. சிறப்பு விருந்தினராக யாழ்.டாண் ரிவியின் நிகழ்ச்சி முகாமையாளர் வன்னிக்குரலோன் ஜெயச்சந்திரன், யாழ்.சிகரம் பணிப்பாளர் கோ.றுஷாங்கன், வடமாகாண திரைப்பட சங்கத் தலைவர் நா.கேசவாராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக யாழ்.ரில்கோ ஹோட்டல் முகாமைத்துவப் பணிப்பாளர் ரி.திலகராஜ், கரிகணன், முகாமைத்துவப் பணிப்பாளர் சி.ராஜ்குமார் யாழ்.பூபாலசிங்கம் புத்தகசாலை வீ.மகாலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நூல் வெளியீட்டுரையை தேசிய கலை இலக்கியப் பேரவை வடபிரதேச செயலாளர் த.ஸ்ரீபிரகாஸ், ஆய்வுரையை சூரியன் வானொலியின் கொழும்பு சிரேஷ்ட அறிவிப்பாளர் ரி.எஸ்.முகுந்தன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.



கல்வியங்காடு வீரபத்திரர் சுவாமி கோயிலின் இராஜகோபுர கும்பாபிஷேகத்தின் போது கும்பாபிஷேகம் இடம்பெறுவதையும், சுவாமி வெளிவீதி வருவதையும், காணலாம். (137)

வெற்றியின் போது கை தட்டும் அந்த பத்து விரல்களை விட, தோல்வியின் போது கண்ணீர் துடைக்கும் ஒரு விரலுக்கே மதிப்பு அதிகம். பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## இவ்வளவு விரைவு வேண்டாமே!

புற்றிலிருந்து ஈசல்கள் பெருகி வருவது போல, நமது தெருக்களில் பெருகிவரும் வாகனங்களின் தொகையைக் காண மலைப்பாக இருக்கிறது. போதாக்குறைக்கு லொறிகளிலும் கெண்டெய்னர்களிலும் ஏ–9 வீதியால் ஒவ்வொரு நாளும் ஏற்றி வந்துகொண்டிருக்கும் வாகனங்களைப் பார்த்தால், இவையும் ஓடுவதற்கு நம் வீதிகளில் இடமிருக்கிறதா என்ற கேள்வியே எழுகிறது.

யாழ் மாநகரில் மட்டும் என்றில்லை, நம் சிறுநகரங்களிலும் கிராமங்களிலும் கூட வாகன நெரிசலில் வீதிகள் மூச்சுத் திணறுகின்றன. குறிப்பாக மோட்டார் சைக்கிள்கள். ஒரு வீட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்கள் இருப்பது சர்வசாதாரணமாக உள்ளது.

வாகனங்களை இறக்கி விற்பனை செய்யும் நிறுவனங்கள் தங்கள் வியாபாரத்தைப் பெருக்கிக்கொண்டே இருக்கின்றன. வாகனம் வாங்குவதற்கு வட்டியில்லா கடன் உதவி, அதனையும் மாதத் தவணைகளில் செலுத்துவது போன்ற வசதிகளை வாகன விற்பனையாளர்களே செய்து கொடுக்கின்றனர். இதன் காரணமாக மிகச்சுலபமாக வாகனங்களை வாங்கி உபயோகிக்கின்றனர் மக்கள்.

போக்குவரத்து நெரிசல் இயல்பு வாழ்க்கையை வெகுவாகப் பாதிக்கிறது. குறிப்பாக பெரியாஸ்பத்திரிக்கு முன்னால் இப்போதே ஊர்ந்து செல்ல வேண்டிய நிலை. அங்கேயே ஆஸ்பத்திரி வளாகம் மேலும் விரிவாக்கப்படுவதோடு, சூழலில் ஹோட்டல்கள், கடைத்தொகுதிகளும் புதிதாக எழுப்பப்பட்டு வருகின்றன. அவசர உதவி வாகனங்கள்கூட சரியான நேரத்துக்கு மருத்துவமனைக்குச் செல்வது இன்றைய சூழலில் இயலாத ஒன்றாகவே உள்ளது.

வாகனங்களின் நெரிசல் அதிகரிக்குமாயின், அதற்கு ஈடாக வீதிவிபத்துகளும் பெருகும். இத்தகைய விபத்துகளில் பெரியவர்களை விட குழந்தைகளும், மாணவர்களும், இளைஞர்களுமே அதிகம் பலியாகின்றனர். உலக அளவில் மூன்று நிமிடத்துக்கு ஒருமுறை சராசரியாக இரண்டு குழந்தைகள் வீதம் வீதிவிபத்தில் உயிரிழப்பதாகக் கூறுகின்றனர். அடுத்த ஆண்டுக்குள் இந்த எண்ணிக்கை மேலும் இரண்டு மடங்காக உயரும் என்று கருதப்படுகிறது.

வாகனங்கள் பெருக எரிபொருள் தேவையும் அதிகரிக்கிறது. அரசாங்கம் பெட்ரோல், டீசல் விலையை அடிக்கடி உயர்த்திக்கொண்டே செல்கிறது. இதன் காரணமாக, அனைத்து விலைவாசியும் விஷம்போல் ஏறுகிறது.

போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு வீதிகளைத் திருத்தியும் அதிகரித்தும் பல்வேறு விதமான போக்குவரத்து விதிமுறைகளைப் பின்பற்றினாலும், அதிகரித்து வரும் வாகனங்கள் காரணமாகப் போக்குவரத்து நெரிசல் சமாளிக்க முடியாத ஒன்றாக உள்ளது.

வீதியமைப்பு வசதிகளைப் பெருக்கும் அதேநேரத்தில் வாகனப் பெருக்கத்துக்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட நேரத்தில் வாகனப் போக்குவரத்து அதிகம் உள்ள வீதிகளைப் பயன்படுத்துவோருக்குக் கட்டணம் நிர்ணயித்தும், வாகனங்களை நிறுத்துவதற்கும் நேரத்துக்குத் தக்கபடி கட்டணம் நிர்ணயம் செய்யும் வெளிநாட்டு நடைமுறைகளை நாமும் பின்பற்றலாம்.

இதனால், சொந்தமாக வாகனங்கள் வைத்திருப்பவர்கள் பொது வாகனங்களைப் பயன்படுத்துகிற கட்டாயத்துக்குத் தள்ளப்படுவர். அதேசமயம், பொதுப் போக்குவரத்து வாகனங்களின் வசதியை நவீனப்படுத்தியும் விரிவுபடுத்தியும் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு இலகுவாக்க வேண்டும். அப்போதுதான் மக்கள் சொந்தமாக வாகனங்கள் வாங்குவதைக் குறைத்துக் கொள்வர்.

தனியார் வாகன பாவனை பெருகுவதால் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு பெரும் நெருக்கடி உருவாகும் என்பதோடு, அத்தனை வாகனங்களிலிருந்தும் வெளிவரும் புகையால் சூழல் மாசடைந்து, பூமியின் வெப்பம் அதிகரித்து, அதனால் வரப் போகும் ஆபத்தையும் விரைவுபடுத்துகிறோம். - ஆசிரியர்

# இராணுவத்தில் இணைந்த பெண்களுக்கு கிருஷ்ணபுரத்தில் வீடமைப்புத் திட்டம்

(கொழும்பு)

இராணுவத்தில் இணைந்த தமிழ்ப் பெண்களுக்கு வீடமைத்துக் கொடுக்கும் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி - கிருஷ்ணபுரம் கிராம அலுவலர் பிரிவிலேயே நேற்றுமுன்தினம் காலை இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் 65ஆவது சுதந்திரதினத்தையொட்டி நடைபெற்ற இந்நிகழ்வில், கிளிநொச்சியில் அமைந்திருக்கும் 571 ஆவது படையணியின் தளபதி கேணல் அமரசேகர தலைமையில் வீடமைப்புக்கு தெரிவுசெய்யப்பட்ட பகுதிக்குரிய போக்குவரத்துக்கான பாதையை அமைக்கும் பணிகள் முதற்கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்பணியில் பிரதேச மக்களும் இராணுவத்தினரும் இணைந்து ஈடுபட்டனர்.

இதனையடுத்து, கிருஷ்ணபுரத்தில் இராணுவத்தில் இணைந்த தமிழ்ப் பெண்களின் வீடுகளுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

இதற்கான அடிக்கல்லினை கிளிநொச்சி பிரதேச பொலிஸ் அத்தியட்சகர் செல்வம், 571 ஆவது படையணியின் தளபதி கேணல் அமரசேகர ஆகியோர் நாட்டி வைத்தனர்.

கிளிநொச்சியில் இவ்வாறு இணைந்திருக்கும் 20 பெண் இராணுவத்தினருக்கான வீடுகள் முதற்கட்டமாக அமைக்கப்படுமென இந்நிகழ்வில் உரையாற்றிய கேணல் அமரசேகர தெரிவித்தார்.

# மாணவிக்கு பொருத்தமான கை; சுகாதார அமைச்சு தேடுகிறது

(கொழும்பு)

வீட்டில் இடம்பெற்ற சிறு விபத்தால் தனது கையை இழந்த கொழும்பு சட்ட பீட மாணவி அச்சலா பிரியதர்ஷனிக்கு பொருத்தமான கையை தேடிக் கொண்டிருப்பதாக சுகாதார அமைச்சின் செயலாளர் நிஹால் ஜயத்திலக தெரிவித்தார்.

தனியார் துறையின் ஒத்துழைப்புடன் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அது குறித்து சுகாதார அமைச்சு கவனம் செலுத்தி வருவதாகவும் கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் குறிப்பிட்டார்.

வெலிக்கடை சிறைக் கைதிகள் கூட தங்கள் உணவுக்கான பணத்தை மாணவிக்கு வழங்கியுள்ள நிலையில் சுகாதார அமைச்சு இதனை கண்டு கொள்ளாதிருப்பது ஏன் என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த சுகாதார அமைச்சின் செயலாளர் மேற்கண்டவாறு கூறினார். மாணவி பாதிக்கப்பட்டதை அடுத்து சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் மாணவியை வைத்தியசாலையில் சென்று பார்வையிட்டு நலம் விசாரித்ததாக அவர் சுட்டிக் காட்டினார். குறித்த மாணவி கை இழந்த சம்பவம் குறித்து விசேட குழுவொன்று விசாரணை நடாத்தி வருவதாகவும், விசாரணையில் யாராவது குற்றம் செய்துள்ளார்கள் என நிரூபிக்கப்பட்டால் சட்டத்திற்கு உட்பட்டு அவர்கள் தண்டிக்கப்படுவர் என சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

மாணவி அச்சலா பிரியதர்ஷினியின் சம்பவத்தை மாத்திரம் வைத்துக் கொண்டு சுகாதார அமைச்சு மீது குற்றம்சாட்ட வேண்டாம் என அவர் ஊடகங்களிடம் கேட்டுக் கொண்டார். இந்தச் சம்பவம் குறித்து ஊடகவியலாளர் ஒருவர் தொடர்ந்தும் கேள்வி எழுப்பிய வண்ணம் இருந்ததால் குற்றம் செய்தவர்களுக்கு சட்டத்தின்படி தண்டனை வழங்கப்படும் எனவும் மன்னர் காலத்தை போன்று தண்டனை வழங்க முடியாதெனவும் சுகாதார அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

# திருடப்பட்ட புத்தர் சிலையுடன் குருவிட்டவில் மூவர் கைது

(குருவிட்ட)

புராதன பெறுமதி வாய்ந்த புத்தர் சிலையுடன் குருவிட்ட - புஸ்ஸெல்ல விகாரைக்கு அருகில் மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். குருவிட்ட பொலிஸாரால் இவர்கள் நேற்று அதிகாலை 12.30 அளவில் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. புஸ்ஸெல்ல விகாரைக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சந்தேகத்திற்கிடமான ஜீப் வண்டியை இரவு நேரக் கடமையில் இருந்த நடமாடும் பொலிஸார் சோதனை செய்துள்ளனர்.

இதன்போது ஜீப்பில் இருந்து 10 அடி உயரமான தங்க நிற புத்தர் சிலை ஒன்றும் இராணுவ சீருடை போன்று காட்சியளிக்கும சீருடைத் தொகையும திசை கருவி இரண்டும் கைப் பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் குறித்த புத்தர் சிலை கடந்த 4 ஆம் திகதி இரவு கொடக்கவெல - வெல் கெனியாய சுமனாராம விகாரையில் களவாடப்பட்ட சிலை என கண்டறியப்பட்டது.

கைதான சந்தேகநபர்கள் தெகிவளை, சியம்பலாண்டுவ, கொட்டதெனிய ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்கென கொடக்கவெல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# நிலஅதிர்வு குறித்து ஆராய அம்பாறைக்கு விசேட குழு விஜயம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தின் சில பிரதேசங்களில் அண்மையில் ஏற்பட்ட நில அதிர்வு குறித்து ஆராய தொல்பொருள் மற்றும் அகழ்வாராய்ச்சி அலுவலகத்தின் விசேட குழுவொன்று இன்று அம்பாறை செல்கிறது.

நான்கு விஞ்ஞானிகள் இக்குழுவில் அடங்குவதாக தொல்பொருள் மற்றும் அகழ்வாராய்ச்சி அலுவலகத்தின் தலைவர் கலாநிதி என்.பி. விஜயானந்த தெரிவித்தார். இவர்களில் புவியியல் வல்லுநர்கள் இருவரும் இயற்பியல் துறை வல்லுநர்கள் இருவரும் அடங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

இக்குழு குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள வனப்பகுதிகளை அண்டிய பிரதேசங்களில் தமது ஆய்வுகளை முன்னெடுக்கவுள்ளது. அம்பாறை மாவட்டத்தின் வட்டினாகல, தேவாலஹித்த, கிவுலேகம, தமண உள்ளிட்ட பகுதிகளில் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக நில அதிர்வு உணரப்பட்டது.

வெடிமருந்தைப் பயன்படுத்தி சிலர் கல் உடைப்பதே இவ் அதிர்வுக்குக் காரணம் என பரவலாக கூறப்பட்ட போதும், நில அதிர்வுக்கான உண்மையான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

# வட, கிழக்கில் மழை; வான்கதவுகள் திறப்பு

(கொழும்பு)

கந்தளாய் நீர்த்தேக்கத்தின் நான்கு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழையால் கந்தளாய் நீர்த்தேக்க வான் கதவுகள் திறக்கப்பட்டதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

இதனால் கந்தளாய் நீர்த்தேக்கத்தை அண்டி உள்ள மக்கள் அவதானமாக இருக்க வேண்டுமென அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின பல பகுதிகளிலும் மழை பெய்யக்கூடும என காலநிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.



நான்காவது சந்திப்பு கசப்பானதாகவே இறைவனுக்கு இருந்தது. ஏனெனில் இறைவன் தொடர்பில் பல்வேறு குற்றச் சாட்டுகளை கடற்புலிகளின் தளபதி சூசை, அனைத்துலக தொடர்பக பொறுப்பாளராக இருந்த கஸ்ரோ மற்றும் கள முனைத் தளபதிகளான பால்ராஜ், சொர்ணம், தீபன் போன்றோர் பிரபாகரனிடம் முறையிட்டு இருந்தனர். இவர்களது குற்றச்சாட்டுகள் தொடர்பில் தமிழன்பனிடம் எந்தவொரு கேள்வியையும் கேட்காத பிரபாகரன் நேரடியாக சந்திப்பு ஒன்றிற்கு, இறைவனையும் அழைத்து வருமாறு தமிழன்பனிடம் தெரியப்படுத்தினார். குற்றம் சுமத்திய தளபதிகளையும் பிரபாகரன் தனது மறைவிடத்திற்கு அழைத்திருந்தார். பல்வேறு குற்றச்சாட்டுகளை தளபதிகள் காரசாரமாக இறைவன் முன்பாக பிரபா-கரனிடம் முன்வைத்தனர். இதனையடுத்து கடுமையாக எச்சரிக்கப்பட்ட இறைவன் பிரபாகரன்முன் தலை குனிந்தவாறு நீண்ட நேரம் நிற்கவேண்டி ஏற்பட்டது.

# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள் 20



**வே. அர்ச்சுணன்**

தவபாலன் தன்னை விடுதலைப் புலிகள் இயக்கத்தில் முழுமையாக இணைத்ததைத் தொடர்ந்து அவர் நடைமுறைகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. குறிப்பாக ஆரம்பத்தில் புலிகளின் ஏனைய துறைசார்ந்தவர்களுக்கு ஓரளவுக்கு மரியாதை கொடுத்து வந்த தவபாலன், 'இறைவன்' என்ற நாமத்தைப் பெற்று தன்னை முழுமையாக இயக்கத்தில் இணைத்துக் கொண்டதைத் தொடர்ந்து ஏனைய துறை சார்ந்த போராளிகளை மதிக்கத் தவறியிருந்தார். இதனால் பல துறைசார்ந்த போராளிகளும் கடுப்புடனேயே இருந்தனர்.

இதைவிட தவபாலன் தன்னை முழுமையாக இயக்கத்தில் இணைத்துக் கொண்டதைத் தொடர்ந்து,தவபாலனின் குடும்பத்திற்கும் இவரிற்குமிடையில் குழப்பங்கள் உருவாகின. தவபாலனின் மனைவி தீவகத்தை சொந்த இடமாகக் கொண்ட ஒரு கூட்டுறவுப் பணியாளர் ஆவார். இவர் தனது கணவன் போராளியாக இணைவார் என்று ஒரு போதுமே எண்ணிப் பார்த்தது கிடையாது. சாதாரணமாக இயக்க நிறுவனங்களில் பணியாற்றுகின்ற பணியாளர் போன்று தனது கணவரும் பணியாற்றி தனது குடும்பத்தை பொறுப்புடன் வழி நடத்துவார் என எண்ணிய மனைவிக்கு தவபாலனின் முடிவு அதிருப்தியைக்கொடுத்தது. முடிவை மாற்றுமாறு தவபாலனிடம் மனைவி மன்றாடிக் கேட்டபோதும், இறைவன் தனது முடிவை மாற்றவில்லை. இதனால் சில நாட்கள் இவர்களது உறவு முறுகலுடன் காணப்பட்ட போதும், பின்னர் இவ்விடயத்தில் 'புலிகளின் குரல்' நிறுவனப் பொறுப்பாளர் ஜவான் நேரடியாகத் தலையிட்டு தவபாலனின் மனைவியைச் சமாதானப்படுத்தி, தவபாலனை ஒருபோதுமே கள முனைக்கு அனுப்பமாட்டேன். அவரை எப்பொழுதும் என்னுடனேயே வைத்திருப்பேன் என்று உறுதிமொழி வழங்கினார். இதனைத் தொடர்ந்து முறுகல்நிலை முடிவுக்கு வந்தது.

தவபாலன், இறைவன் என்ற நாமத்துடன் புலிகளின் குரல் நிறுவனத்தில் தன்னை முழுமையான போராளியாக இணைத்து செயற்படத் தொடங்கிய காலத்தில் புலிகளின் குரல் நிறுவனத்திற்குரிய மென்பொருட்கள், நவீன உபகரணங்கள் என்பனவற்றை வன்னிப் பகுதிக்கு எடுத்து வருவதற்குரிய நேரடி 'டீலை' இறைவனே மேற்கொள்ளத் தொடங்கினார். ஏற்கனவே நோர்வே ஊடாக சில மென்பொருள்களையும், தொடர்பாடல்களுக்குரிய நவீன உபகரணங்களையும் கொள்வனவு செய்வதற்குரிய முயற்சிகளில் தமிழ்ச்செல்வன் ஈடுபட்டு தோற்றுப் போயிருந்த சூழ்நிலையில், இறைவன் இச்செயற்பாட்டில் நேரடியாக ஈடுபடத் தொடங்கினார். குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச உயர் அதிகாரிகள், தொண்டுநிறுவனப் பணியாளர்கள் ஆகியோருடன் நேரடி 'டீலை' இறைவன் மேற்கொள்ளத் தொடங்கினார்.




இறைவன் மேற்கொண்ட டீல் அனைத்துமே வெற்றி அளிக்காவிட்டாலும் சில டீல்கள் சாதகமாக அமைந்தன. குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், சிவநேசன், ரவிராஜ் போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் இறைவனின் கோரிக்கைகளை ஏற்று வன்னிக்கு வந்து செல்கின்ற பொழுது சில மென்பொருள்களையும், தொடர்பாடல் சாதனங்களையும் புலிகளின் குரல் நிறுவனத்திற்கு நேரடியாகச் சென்று இறைவனிடம் கையளித்து வந்தனர். இவ்வாறு கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் U.N.H.C.R நிறுவனத்தில் பணியாற்றிய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் பெயரை ஒத்த ஒருவர் இந்த உபகரணங்களை புலிகளிற்கு தமது தொண்டு நிறுவன வாகனத்தில் எடுத்து வந்து கொடுத்து வந்தார். தற்போதும் இந்தப் பணியாளர் ஐ.நா. நிறுவனத்தில் வவுனியாவில் இருந்தவாறு பணியாற்றி வருகின்றார். இவரே 'தமிழ் நெற்' எனப்படும் இணையத் தளத்தின் வன்னிச் செய்தியாளராக கடமையாற்றிய செய்தியாளர் ஒரு-வரை மெனிக் முகாமிலிருந்து தமது தொண்டு நிறுவன வாகனத்தில் கடத்தி வந்து வெளிநாடு ஒன்றிற்கு அனுப்பி வைத்தார்.குறித்த செய்தியாளர் வெளிநாடு சென்று இலங்கைக்கு எதிரான போர்க்குற்றங்கள் தொடர்பான செய்திகளை தயாரித்துவரும் 'சனல் 4' உடன் இணைந்து அதற்கு உதவிவருகிறார்.

இவ்வாறு இறைவன் ஐ.நா. நிறுவனத்தில் உயர் அதிகாரியை கைக்குள் போட்டு தனது நிறுவனத்திற்கு வேண்டிய சாதனங்களைகொள்வனவு செய்து வந்தார். இதனால் இறைவனின் பலமும் இறைவன் மீதான நம்பிக்கையும் இதன் பொறுப்பாளராக விளங்கிய ஜவானிடம் அதிகரித்து வந்தது. இந்த நிலையில் ஜவானை பிரபாகரன் சந்திப்பு ஒன்றிற்காக அழைத்திருந்தார். இச்சந்திப்பில் புலிகளின் குரல் நிறுவனத்தில் பணியாற்றுகின்றவர்களை அரசியல் துறையுடன் களமுனைக்குரிய 'ரீமில்' இணைப்பது பற்றிய பேச்சுக்களே இடம்பெற்றது. இதன் போது தவபாலன் எனப்படும் இறைவன் தொடர்பாகவும், குடும்ப நிலைப்பாடு தொடர்பாகவும், இறைவனின் தற்போதைய செயற்பாடுகள், புதிய டீல்கள் தொடர்பாகவும் ஜவான் எனப்படும் தமிழன்பன் பிரபாகரனிடம் எடுத்து விளக்கினார். இதன்பின் பிரபா-கரன் இறைவனை, தான் நேரடியாக சந்திப்பதற்குரிய ஒழுங்குகளைச் செய்யுமாறும் அன்று மாலையே சந்திப்பதற்குரிய ஏற்பாட்டை மேற்கொள்ளுமாறும் தமிழன்பனிடம் பணிப்புரை விடுத்தார்.

இது தமிழன்பனிற்கு மட்டுமல்ல இறைவனுக்கும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகவே இருந்தது. ஏனெனில் பிரபா-கரனை சந்திப்பது இயக்கத்தில் இருக்கின்ற சிலருக்கு மட்டுமே கிடைக்கின்ற சந்தர்ப்பமாக இருந்தது. கரும்புலிகளை தவிர வேறு சாதாரண போராளிகள் பிரபாகரனை அரிதாகவே சந்தித்து வந்தனர். பிரபாகரனைச் சந்திப்பதாக இருந்தால், அதுவும் புலிகளின் குரல் நிறுவனம் தமிழ்ச்செல்வன் ஊடாக அனுமதி கோரி அந்த அனுமதி கிடைத்த பின்னரே சந்திக்க முடியும். அது இலகுவான விடயமல்ல. ஆனால் இறைவன் பிரபாகரனை மொத்தம் 5 தடவைகள் நேரடியாகச் சந்திக்கின்ற சந்தர்ப்பத்தை பெற்றிருந்தார். ஏற்கனவே 3 தடவைகள் பிரபாகரனை சந்தித்த பொழுது அந்த சந்திப்புக்கள் சாதகமானவைகளாகவும், பிரபாகரனுடன் விருந்து உண்ணுகின்ற அளவிற்கு அமைந்திருந்தன. ஆனால் நான்காவது தடவை இடம்பெற்ற சந்திப்பு கசப்பானதாகவே இறைவனுக்கு இருந்தது. ஏனெனில் இறைவன் தொடர்பில் பல்வேறு குற்றச் சாட்டுகளை கடற்புலிகளின் தளபதி சூசை, அனைத்துலக தொடர்பக பொறுப்பாளராக இருந்த கஸ்ரோ மற்றும் களமுனைத் தளபதிகளான பால்ராஜ், சொர்ணம், தீபன் போன்றோர் பிரபா-கரனிடம் முறையிட்டு இருந்தனர். இவர்களது குற்றச்சாட்டுகள் தொடர்பில் தமிழன்பனிடம் எந்தவொரு கேள்வியையும் கேட்காத பிரபாகரன் நேரடியாக சந்திப்பு ஒன்றிற்கு, இறைவனையும் அழைத்து வருமாறு தமிழன்பனிடம் தெரியப்படுத்தினார். குற்றம் சுமத்திய தளபதிகளையும் பிரபாகரன் தனது மறைவிடத்திற்கு அழைத்திருந்தார். இச்சந்திப்பின் போது பல்வேறு குற்றச்சாட்டுகளை தளபதிகள் காரசாரமாக இறைவன் முன்பாக பிரபாகரனிடம் முன்வைத்தனர். இதனையடுத்து கடுமையாக எச்சரிக்கப்பட்ட இறைவன் பிரபாகரன் முன் தலை குனிந்தவாறு நீண்ட நேரம் நிற்கவேண்டி ஏற்பட்டது. தொடர்ந்து ஏனைய துறைசார்ந்த தளபதிகளின் செய்திகளை முதன்மைப்படுத்தி வெளியிட இன்றிலிருந்து நடவடிக்கை எடுப்பேன் என்ற உறுதிமொழியை பிரபாகரனிடம் இறைவன் வெளிப்படுத்தினார். கடுமையான எச்சரிக்கைகளை விடுத்த பிரபாகரன் ஜவானுடன் இறைவனை உடனடியாகவே அனுப்பிவைத்தார்.

இதனை அடுத்து தமது நிறுவன அலுவலகத்திற்கு வந்த இறைவன் ஒரு கிழமை விடுமுறை கோரி விண்ணப்பித்துவிட்டு விடுமுறையில் வீட்டிற்குச் செல்லாமல் அலுவலகத்திலும் பணியாற்றாமல் மௌனமாக தனது நாட்களை கழித்த இறைவன் விரக்திநிலையில் காணப்பட்டார். ஜவான் எவ்வளவோ சமாதானம் கூறியும் இறைவன் இறங்கிவரவில்லை. இந்நிலையில் தமிழ்ச்செல்வன் இறைவனிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சமாதானம் கூறியதுடன் தலைவர் எதையும் மனதில் வைத்திருக்கமாட்டார். உங்கள் தொடர்பில் நல்ல அபிப்பிராயமே உள்ளது. அவர் மற்றத் தளபதிகளை திருப்திப்படுத்துவதற்காக அவ்வாறு நடந்திருப்பார். என்னிடம் உங்கள் தொடர்பில் நல்ல கருத்துக்களையே தெரிவித்தார். உங்களை தொடர்ந்து வேலையை சிறப்பாக செய்ய சொல்லுமாறு என்னிடம் சொன்னார் என தலைவர் சொன்னது போன்று தமிழ்ச்செல்வன் இறைவனிடம் சொல்லி மீண்டும் வேலை செய்ய பணித்தார். இறைவன் மீண்டும் வேலை செய்யத் தொடங்கினார்.

இவ்வாறு பிரபாகரனை சந்தித்த நான்காவது சந்திப்பு கசப்பானதாக இருந்த சூழலில் ஐந்தாவது சந்திப்பு எப்படி இருக்கும் என்ற ஏக்கத்துடன் இறைவன் பிரபாகரனை சந்திக்கத் தயாரானார். இச் சந்திப்பு எப்படியிருந்தது? இச்சந்திப்பு விடுதலைப் புலிகளின் அழிவிற்கு வழிகோலியதா? அல்லது வளர்ச்சிக்கு வழிகோலியதா? என்பதை தொடர்ந்து பார்ப்போம். **(தொடரும்)**

# சுதந்திரமும் வாக்குறுதியும் பேச்சளவிலேயே உள்ளது

(கொழும்பு)

நாட்டு மக்களுக்கு தற்போது அனைத்துத் துறைகளினதும் சுதந்திரம் என்பது வாக்குறுதிகளிலும் பேச்சளவிலுமே காணபபடுகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக் குடியரசின் 65 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.


அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு,

இற்றைக்கு 65 ஆண்டுகளுக்கு முன்னர் நாட்டிற்கு சுதந்திரம் பெற்றுக்கொடுத்த கட்சி ஐக்கிய தேசியக் கட்சியேயாகும். தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் அந்த சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு நாட்டு மக்களுக்கு மாத்திரமல்ல, ஆட்சியாளர்களுக்கும் உண்டு. எனினும், நாள்தோறும் மக்களின் சுதந்திரம் மட்டிடப்படுகின்ற ஒரு யுகத்தை நோக்கியே இன்று நாம் பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.

அன்று நாட்டிற்குச் சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுக்கும் வேளையில் ஐக்கிய தேசியக் கட்சி ஜவகைச் சுதந்திரத்தையும் பூரணமாகப் பெற்றுக்கொடுப்பதற்கான செயற்றிட்டத்தையே முதன்மைப்படுத்தியது.

ஜனநாயகக் கட்டமைப்பின் கீழ் மக்கள் வாழ்வதற்கான சுதந்திரம், வறுமையிலிருந்து சுதந்திரம், தொழிலின்மையிலிருந்து சுதந்திரம், அறியாமையிலிருந்து சுதந்திரம் மற்றும் நோயிலிருந்து சுதந்திரம் இவையே ஜவகைச் சுதந்திரங்களுமாகும்.

ஆனால், இன்று நாட்டு மக்களுக்கு இந்த அனைத்து துறைகளினதும் சுதந்திரம் வாக்குறுதிகளிலும், பேச்சளவிலுமே காணப்படுகின்றது. அதுமட்டுமல்ல, சர்வதேச சமூகத்திற்கு வழங்கிய வாக்குறுதிகள் மற்றும் ஒப்பந்தங்கள் மீறப்படுவதனால் சர்வதேச மட்டத்தில் எமது நாடு



பெற்றிருந்த நற்பெயருக்கு மாத்திரமல்ல, சுதந்திரத்திற்கும் களங்கம் ஏற்பட்டுள்ளது.

அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நாட்டிற்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்த கட்சி என்ற அடிப்படையிலும், தற்போதுள்ள துரதிர்ஷ்டவசமான சூழலிலிருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் மீட்டெடுக்கும் நோக்கை அடிப்படையாகக் கொண்டும் நாடு இழந்துகொண்டு செல்லும் சுதந்திரத்தை மீண்டும் வென்றெடுப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்குத் திடசங்கற்பம் பூணுவோம் என ரணில் மேலும் தெரிவித்தார்.

# இடது கை இழந்த சட்டபீட மாணவிக்கு உதவி



(கொழும்பு)

இடது கை அகற்றப்பட்ட நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள கொழும்பு சட்டபீட மாணவி அஷச்சலாவுக்கு வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் உதவி செய்துள்ளனர்.

சுதந்தர தினமான நேற்றுமுன்தினம் வெலிக்கடை சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் கைதிகளுக்கென பகல் மற்றும் இரவு நேரத்திற்கு ஒதுக்கப்பட்ட 2 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவையே குறித்த மாணவிக்கு கைதிகள் கொடுத்துள்ளனர்.

கைதிகளின் கடுமையான வேண்டுகோளின் அடிப்படையிலேயே மாணவியின் தந்தை மற்றும் சகோதரியிடம் அதற்கான காசோலை கையளிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்கள ஆணையாளர் கொடிபிலி தெரிவித்தார். வெலிக்கடைச் சிறைச்சாலையில் வைத்தே குறித்த காசோலை கையளிக்கப்பட்டுள்ளது.

# பிரித்தானிய காலத்து வீதிகளுக்கு பெயர் மாற்றம்

(கொழும்பு)



கொழும்பு பிரதேசத்தின் பெருந்தெருக்களுக்கு தற்போதுள்ள பெயர்களில் மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கலாசார மற்றும் மரபுரிமைகள் அமைச்சர் டி.பி.எக்கநாயக இதனை குறிப்பிட்டுள்ளார்.

சில பாதைகளுக்கு சூட்டப்பட்டுள்ள பெயர்கள் பிரித்தானிய காலத்து பெயர்களாக இருக்கின்றன. அத்துடன், பொருத்தப்பாடில்லா பெயர்களாகவும் இருக்கின்றன.

இதனை தற்போது மாற்றம் செய்ய வேண்டிய தேவைப்பாடு உள்ளதாகவும் அமைச்சர் டி.பி.எக்கநாயக குறிப்பிட்டுள்ளார்.

# பல்கலை அனுமதிக்கான வயதைக் குறைப்பது நல்லது

## பேராசிரியர் சந்திரசேகரன்

இலங்கையில் பாடசாலைக்கான ஆண்டுகளை குறைப்பதில் சில பாதகங்கள் இருந்தாலும், பல்கலைக்கழக அனுமதிக்கான வயதைக் குறைப்பது வரவேற்கத்தக்கதே எனறு கல்வியியலாளரான பேராசிரியர் சோ. சந்திரசேகரன் கூறியுள்ளார்.

இலங்கையில் பல்கலைக் கழகங்களுக்கான அனுமதி வயதை குறைப்பதற்கான ஒரு திட்டத்தை தாம் ஆராய்வதாக இலங்கை உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கா கூறியிருந்தார்.


அதற்காக பாடசாலைக்கான அனுமதி வயதை குறைப்பது மற்றும் தற்போது அமுலில் உள்ள 13 ஆண்டு கால பாடசாலைக் கல்வியை 12 ஆண்டுகளாகக் குறைப்பது ஆகியவை குறித்து தாம் ஆராய்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்தபோதே பேராசிரியர் சோ. சந்திரசேகரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வெளிநாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் பல காரணங்களினால், பல்கலைக்கழக கல்வியை ஒருவர் முடிக்கும் காலம் அதிகமாக இருக்கின்றது.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், இலங்கையில் பல்கலைக்கழக அனுமதிக்கான வயதைக் குறைப்பது வரவேற்கத்தக்கது. ஆனால், 13 ஆண்டு கால பாடசாலைக் கல்வியைக் குறைபபது சரியல்ல எனினும் ஆரம்பக் கல்வியை ஆரம்பிக்கும் வயதை குறைப்பது நல்லது என்றார்.

# 82 போலிக் கடவுச்சீட்டுடன் இந்தியாவில் சிக்கிய இலங்கையர்



(கொழும்பு)


82 போலிக் கடவுச் சீட்டுகளுடன் இலங்கையர் ஒருவர், இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

போலியான கடவுச் சீட்டுகளைத் தயாரித்து நபர்களை வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கையர்களே இவ்வாறு வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

32 வயதான இலங்கையர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். வழமையான வாகன பரிசோதனையின் போது குறித்த இலங்கையரை இந்தியக் காவல்த்துறையினர் கைது செய்துள்ளனர்.

இலங்கைவாழ் தமிழர்களை ஈரான், ஈராக் மற்றும் எகிப்து போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்கும் சென்னையைச் சேர்ந்த முகவர் ஒருவருக்கு தாம் உதவிகளை வழங்கி வருவதாக குறித்த இலங்கையர் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளார். சந்தேக நபருக்கு எதிராக பல பிரிவுகளின் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக இந்திய காவல்துறையினர் அறிவித்துள்ளனர்.

# களுவன்கேணி காட்டுப்பகுதியில் இளைஞனின் சடலம் மீட்பு



மட்டக்களப்பு - ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுவன்கேணி காட்டுப்பகுதியில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுவன்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த செல்வராஜா ஜனூராஜ் (வயது - 20) என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை தொழிலுக்காக கடலுக்குச் சென்ற தனது மகன் நீண்டநேரமாகியும் வீடு திரும்பததால் அவரை தேடிச் சென்று பார்த்தபோது காட்டில் சடலமாக காணப்பட்டதாக, உயிரிழந்த இளைஞனின் பெற்றோர் தெரிவித்ததுள்ளனர்.

இளைஞனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக செங்கலடி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். இதுகுறித்த மேலதிக விசாரணைகளை மேற கொண்டு வருவதாகவும் ஏறாவூர் பொலிஸார் குறிப்பிட்டனர்.

# டெங்குக் காய்ச்சல் சிறுவனை பலியெடுத்தது

(அம்பாறை)


அம்பாறை - கல்முனையில் டெங்கு காய்ச்சலினால் சிறுவன் ஒருவன் மரணமடைந்துள்ளான்.

கல்முனையைச் சேர்ந்த வைத்தியர் ஒருவரின் 6 வயதான மகனே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

கடந்த சில தினங்களாக டெங்குக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட இச்சிறுவன், கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு லேடி ரிச்வே வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே நேற்று முன்தினம் இரவு இவன் மரணமடைந்துள்ளதாக கல்முனை சுகாதார வைத்தியப் பிரிவினர் தெரிவித்தனர்.

# நீதி பேணப்படவில்லை கூறுகிறார் சோமவன்ச

(கொழும்பு)



நீதி பேணப்படுவதில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

எந்தவொரு நபரும் தனக்குத் தேவையான வகையில் செயற்படுவதற்கு இந்நிலைமை வழிவகுத்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

நாட்டில் நீதி பேணப்படாத இந்த நிலைமையின் காரணமாக பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என சோமவன்ச அமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

மிருகங்களுக்கு இருக்கும் நீதி கூட இலங்கை நாட்டில் இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலி, ஹபராதுவ பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றின் போது மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

# யுத்தம் வதைத்த மக்களை மீண்டும் வதைக்கிறது மழை

– கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் கவலை



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் பெய்த கடும் மழையால் பல பிரதேசங்களின் நெல் அறுவடை மற்றும் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளன.

கடன்பட்டுச் செய்த நெற்செய்கை அழிவடைந்து தாம் மேலும் கடன்காரராவதையிட்டு விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இறுதி யுத்தத்தில் அனைத்தையும் இழந்து வெறும்கையுடன் வந்து வாழ்க்கையை ஆரம்பித்த தமக்கு இயற்கையின் சீற்றம் பேரிடியாக உள்ளதாகக் கவலையுடன் கூறுகின்றனர்.

கோணாவில் - அக்கராயன் வீதியில் உள்ள யூனியன் குளம் உடைப்பெடுத்ததால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 200 ஏக்கர் அறுவடைக்குத் தயாரான வயல் முழுமையாக அழிவடைந்துள்ளது. 300 குடும்பங்கள் போக்குவரத்துச் செய்ய முடியாமல் தனித்து விடப்பட்டுள்ளன.

இதனால் இக் குடும்பங்களிலுள்ள மாணவர்கள் பாடசாலை செல்ல முடியாமல் வீடுகளில் முடங்கிப் போயுள்ளனர்.

யூனியன் குளம் உடைப்பெடுக்காதவாறு விவசாயிகளால் கிரவல், மண் உரப்பைகளால் தடுப்பு போடப்பட்டிருந்தன. திடீரெனப் பெய்த கடும் மழையால் குளத்து நீர் பீறிட்டு பாய்ந்து வீதியை ஊடறுத்துக் கொண்டு சென்றுள்ளது.

வருடாவருடம் இவ் வீதி இதே விதமாக சேதமடைவதால் இப்பிரதேச மக்கள் தொடர்ந்தும் துன்பப்படுகின்றனர்.

இவ் வீதியில் பாலம் ஒன்றை உயரமாகக் கட்டி குளத்தின் அணையையும் பாதுகாப்பான முறையில் கட்டித் தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குளம் உடைப்பெடுத்ததால் சிறுபோகச் செய்கையை முற்றாகக் கைவிடும் நிலை ஏற்பட்டது குறித்தும் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

பருவம் தப்பிய மழைகளால் தாம் பாதிப்புறுவதற்கு பொருத்தமான நஷ்ட ஈட்டை அரசாங்கம் தரல் வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (90)

## சாதனை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ஆங்கில தினப் போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி மாணவன் உதயகுமரன் விதுஷன் ஆங்கில மனன தேசிய மட்டப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

# யாழ்.மாநகரசபையில் சுதந்திரதின நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

நாட்டின் 65 ஆவது சுதந்திர தின கொண்டாட்ட நிகழ்வுகள் நேற்று முன்தினம் யாழ் மாநகர சபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் முதல்வர் மாநாட்டு மண்டபத்திற்கு முன்பாக மிக விமரிசையாக நடைபெற்றது.

இவ்விழாவில் மாநகர சபையின் கௌரவ உறுப்பினர்கள், ஆணையாளர், செயலாளர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸார் எனப்பலர் கலந்து கொண்ட னர்.

இந்நிகழ்வில் தேசியகீதம் இசைக்கப்பட மாநகரசபை முதல்வர் தேசியக் கொடியினை ஏற்றிவைத்தார். இதன்போது கலந்து கொண்ட அனைவரும் தேசியக்கொடிக்கு மரியாதை செலுத்தினர்.

## மகோற்சவம்

புலோலி கிழக்கு ஸ்ரீ முதலி மனோன்மணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இவ் உறசவத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை இரவு சப்பறமும், 24 ஆம் திகதி காலை 10 மணிக்கு இரதோற்சவமும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்த உற்சவமும் இரவு கொடியிறக்கமும் இடம் பெறவுள்ளது.




# சமநிலையில் நிறைவு



(வாலன்சியா)

பார்சிலோனா,வாலன்சியா அணிகள் மோதிய லா லிகா கால்பந்து போட்டி சமநிலையானது.

ஸ்பெயினில் லா லிகா கால்பந்து தொடர் நடக்கிறது. இதன் லீக் போட்டியில் பார்சிலோனா, வாலன்சியா அணிகள் மோதின. போட்டியின் முதல் பாதியில் வாலன்சியா அணியின் எவர் பனேகா (33ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு 39ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பில், பார்சிலோனா நட்சத்திர வீரர் மெஸ்சி பதிலடி கொடுத்தார்.

பின் இரண்டாவது பாதியில் இரு அணி வீரர்களின் கோல் முயற்சியும் பலிக்கவில்லை. முடிவில், போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையானது.

மற்றுமொரு போட்டியில் அத்லெடிகோ மாட்ரிட், ரியல் பெட்டிஸ் அணியை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. ரியல் சோஸிடெட், மலோர்காவை 3-0 என வென்றது.

# களமிறங்குகிறார் வட்சன்

மேற்கிந்தியத்தீவு அணிக்கெதிரான இன்றைய போட்டியில் அவுஸ்ரேலிய அணியின் சகலதுறை வீரர் வட்சன் களமிறங்குவார் என அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

நியூசிலாந்து அணியுடனான டெஸ்ட் தொடரின்போது வட்சன் காயமடைந்திருந்தார்.

இதன் காரணமாக மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான முதலிரு ஒரு நாள் போட்டிகளிலும் வட்சன் விளையாடவில்லை.

இந்நிலையில் எதிர்வரும் இந்திய அணியுடனான டெஸ்ட் தொடரிற்கு தயாராகும் வகையில், மேற்கிந்தியத்தீவு அணியுடனான ஏனைய மூன்று போட்டிக்கான அவுஸ்ரேலிய அணியில் வட்சன் இணைக்கப்பட்டுள்ளார் என கிரிக்கெட் சபை மேலும் தெரிவித்துள்ளது.

# கால்பந்திலும் ஆட்ட நிர்ணயம்

உலகம் முழுவதும் நடந்த 680 கால்பந்து போட்டிகளில் ஆட்ட நிர்ணயம் நடந்திருப்பது தெரியவந்துள்ளது. உலக அளவில் விளையாட்டுகளில் கால்பந்து போட்டி முதலிடம் வகிக்கிறது. இதில் உலகம் முழுவதும் நடைபெற்ற பல்வேறு கால்பந்து போட்டிகளில் முன்கூட்டியே வெற்றி - தோல்வியை முடிவு செய்யும் ஆட்ட நிர்ணயம் நடந்திருப்பது தெரிய வந்தது.

சில போட்டிகளில் வீரர்களின் ஆட்டத்திறனை வைத்து ஆட்ட நிர்ணயப் புகார்கள் எழுந்தன. இதையடுத்து ஐரோப்பிய பொலிஸ் மற்றும் கால்பந்து சங்கத்தினர் இணைந்து விசாரணை நடத்தினார்கள்.

அப்போது ஆட்ட நிர்ணயம் நடந்த திடுக்கிடும் தகவல் வெளியானது. கிளப் ஆட்டங்கள் தவிர முக்கியமான உலக கோப்பை, யூரோ கோப்பை மற்றும் முன்னணி ஆட்டங்களில் ஆட்ட நிர்ணயம் நடந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

மொத்தம் 680 போட்டிகளில் ஆட்ட நிர்ணயம் இடம் பெற்றுள்ளது. உலக கோப்பை, யூரோ கோப்பை, சம்பியன்ஸ் லீக், தகுதி சுற்று ஆட்டங்களில் இந்த மோசடி நடந்துள்ளது.

இது குறித்து சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பீபா) கவலை வெளியிட்டுள்ளது. இது குறித்து அது வெளியிட்ட செய்திக் குறிப்பில், கடந்த பல நூற்றாண்டுகளாக கால்பந்து போட்டி மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்றது. ஆனால், தற்போது ஆட்ட நிர்ணயம் கால்பந்து போட்டிகளிலும் இடம்பெறுகின்றது என்ற செய்தி எமது அமைப்பை கவலை அடையச் செய்துள்ளது. இந்தச் செயற்பாட்டை உடனடியாக இல்லாமல் செய்வதற்கான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்வோம். எதிர்வரும் காலங்களில் இது போன்ற செயற்பாட்டில் வீரர்கள் ஈடுபடாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மும்பையில் நடந்த தனியார் நிகழ்ச்சி ஒன்றில் உற்சாகத்துடன் பங்கேற்ற இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் மற்றும் பொலிவுட் நடிகை ஐஸ்வர்யாராய் உரையாடுவதைக் காணலாம்.

# கிரிக்கெட்டுக்குச் சேவை நிறைவேறுமா ஆசை

(புதுடில்லி)

இந்திய கிரிக்கெட் வளர்ச்சிக்கு எந்த வழியிலும் சேவையாற்றத் தயாராக உள்ளேன் என முன்னாள் கப்டன் அசாருதீன் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் முன்னாள் கப்டன் முகமது அசாருதீன் (வயது-49). கிரிக்கெட் சூதாட்டத்தில் சிக்கிய இவருக்கு வாழ்நாள் தடை விதிக்கப்பட்டது.

இதனை கடந்த நவம்பரில் ஆந்திர நீதிமன்றம் நீக்கியது. தற்போது இந்திய அணிக்கு பயிற்சியாளராக விருப்பம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அசார் கூறுகையில், இந்திய கிரிக்கெட் வளர்ச்சிக்கு எந்த வழியிலும் சேவையாற்றத் தயாராக உள்ளேன். எனது சேவையை சிறந்து முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம். அணியின் பயிற்சியாளராக, என்னை பணியமித்த பி.சி.சி.ஐ.க்கு அதிகாரம் உண்டு.

அணியில் இளம் வீரர்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். ஐ.பி.எல். தொடர் சிறப்பான ஒன்றுதான். ஆனால், திறமையான வீரர்கள் சிலரை, புறக்கணிக்கின்றனர். எல்லாவிதமான போட்டிகளிலும், விளையாட நல்லதிறன் படைத்த வீரர்கள் தேவைப்படுகின்றனர்.

இப்படிப்பட்டவர்களை, அணியில் சேர்க்கவேண்டும். நல்ல தீர்ப்பு கிடைத்தது மகிழ்ச்சி அளிக்கிறது. ஒரு கிரிக்



கெட் வீரர், அரசியல்வாதி என்ற முறையில் பலருக்கு உதவ விரும்புகிறேன். நல்ல துடுப்பாட்ட வீரர்கள் அணியில் இருப்பது மகிழ்ச்சி. ஆனால், பந்து வீச்சாளர்களின் வரவு குறைந்தளவிலேயே உள்ளது. நல்ல பந்து வீச்சாளர்கள் உருவாகாததேஇந்திய அணியின் கடந்த காலத் தோல்விகளுக்கு அடிப்படை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்..

# சேவாக் சந்தேகம்



இரானி கிரிக்கெட் தொடரில் சேவாக் சிறப்பாக செயற்படும் பட்சத்திலேயே அவுஸ்ரேலிய அணியுடனான டெஸ்ட் தொடரில் இடம்பெற முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி இம்மாத இறுதியில் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 4 டெஸ்ட் கொண்ட தொடரில் மோதவுள்ளது. முதல் டெஸ்ட் போட்டி 22ஆம் திகதி சென்னையில் ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில் இந்த டெஸ்ட் தொடருக்கான இந்திய அணி தேர்வு எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அணி தேர்வை தொடர்ந்து பெங்களூரில் வீரர்களுக்கான சிறப்பு பயிற்சி முகாமுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த முகாம் 15ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. முதலில் இந்த முகாமை 10 நாட்கள் நடத்த திட்டமிட்டிருந்தனர். ஆனால் சில முன்னணி வீரர்கள் ஓய்வு தேவை என கூறியுள்ளதால் ரெஸ்ட் ஒப் இந்திய அணிக்கு கப்டனாக செயற்படும் சேவாக்கிற்கும் இரானி கோப்பை தொடர் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். இத்தொடரில் சிறப்பாகச் செயற்படும் பட்சத்திலேயே சேவாக் மீண்டும் அணியில் இடம்பிடிக்க முடியும் எனவும், தொடர்ந்து சேவாக் சொதப்பும் வகையில் அவுஸ்ரேலிய அணியுடனான டெஸ்ட் தொடருக்கு அவர் அழைக்கப்பட மாட்டார் என இந்திய கிரிக்கெட் சபையின் முக்கிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# தரப்படுத்தலில் அம்லா சாதனை



(டுபாய்)

டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தரப்படுத்தலில் முதலிடம் பிடித்து இரண்டாவது வீரர் என்ற பெருமையை தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரர் அம்லா பெற்றுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சங்கம் வீரர்களின் தரவரிசையை வெளியிட்டுள்ளது. இதில் அதில் தென்னாபிரிக்கா வீரர் அம்லா டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டி இரண்டிலும் முதலிடம் பெற்றுள்ளார்.

டெஸ்ட் போட்டியில் அம்லா 895 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் உள்ளார். அவுஸ்ரேலிய வீரர் கிளார்க் 887 புள்ளிகள் பெற்று 2ஆவது இடத்திலுள்ளார். மேற்கிந்தியத்தீவுகள் வீரர் சந்தர்போல் 879 புள்ளிகளுடன் 3ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

அதேபோல ஒரு நாள் கிரிக்கெட் போட்டி தரவரிசையில் அம்லா 886 புள்ளிகள் பெற்று முதலிடத்திலுள்ளார். தென்னாபிரிக்க வீரர் டிவில்லியர்ஸ் 834 புள்ளிகள் பெற்று 2ஆவது இடத்திலும், இந்திய வீரர் ஹோலி 612 புள்ளிகள் பெற்று 3ஆவது இடத்திலும் உள்ளனர்.

டெஸ்ட்- ஒருநாள் போட்டியில் இரண்டிலும் ஒரே நேரத்தில் இதற்கு முன்பு அவுஸ்ரேலிய வீரர் ரிக்கி பொண்டிங் முதலிடத்தில் இருந்துள்ளார். அதன் பின்னர் இந்த பெருமையை அம்லா பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஏலத்தால் எழுச்சி

ஐ.பி.எல் ஏலத்தின் மூலம் வாழ்க்கையில் திடீர் எழுச்சி பெற்றுவிட்டேன். எனது வாழ்க்கையில் இவ்வளவு பணத்தை எப்போதும் பார்த்ததில்லை. உண்மையை சொல்வ தென்றால், இந்த பணத்தை எல்லாம் எப்படி செலவு செய்யப் போகிறேன் என்றே தெரியவில்லைஎன கிறிஸ்மோரிஸ்தெரிவித்துள்ளார்.

ஆறாவது ஐ.பி.எல். ருவென்ரி 20 கிரிக்கெட் தொடர் வரும் ஏப்ரல் 3ஆம் திகதி முதல் மே 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதற்கான ஏலத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக, தென்னாபிரிக்காவின் இளம் சக்லதுறை வீரர் கிறிஸ் மோரிஸ் ரூ. 3.3 கோடிக்கு வாங்கப்பட்டார். 25 வயதான இவரது அடிப்படை விலை ரூ. 11.65 இலட்சமாக இருந்தது. கடைசியில் 31 மடங்கு அதிகமாக ரூ. 3.31 கோடிக்கு விலை போனார். தென்னாபிரிக்காவுக்காக இது வரை ஒரே ஒரு சர்வதேச ருவென்ரி-20 போட்டியில் மட்டும் பங்கேற்று 19 ஓட்டங்களும், 2 விக்கெட்டும் கைப்பற்றியுள்ள இவர், தற்போது காயத்தால் அவதிப்பட்டு வருகிறார்.

சென்னையில் நடந்த ஏலத்தை தனது ஐ-பேடில் நேரடியாக பார்த்த கிறிஸ் மோரிஸ் கூறுகையில், ஏலம் நடப்பதற்கு முன்பு ரூ. 2.38 கோடிக்கு ஏலம் போனால் எப்படி இருக்கும் என்று சகவீரர் நீல் மெக்கன்சி, நகைச்சுவையாக



கூறினார்.கடைசியில் நடந்ததை யாராலும் நம்ப முடியவில்லை. எனது வாழ்க்கையில் இவ்வளவு பணத்தை எப்போதும் பார்த்ததில்லை.

உண்மையை சொல்வதென்றால், இந்த பணத்தை எல்லாம் எப்படி செலவு செய்யப் போகிறேன் என்றே தெரியவில்லை. எனது பெற்றோர் என்ன விரும்புகின்றார்களோ, அதை பெற்றுத்தரலாம் என்று நினைத்துள்ளேன். இந்த ஏலத்தின் மூலம் எனது வாழ்க்கை, மிக விரைவில் எப்படி மாறியுள்ளது என்பதை உணர்ந்துள்ளேன். தற்போதுள்ள காயத்தில் இருந்து விடுபட பிசியோதெரபிஸ்ட்டுடன் இணைந்து கடினமாக முயற்சித்து வருகிறேன் என்றும் சரியான நேரத்தில் ஐ.பி.எல். தொடரில் விளையாட தயாராகிவிடுவேன் எனவும் கூறியுள்ளார்.

# வேலணைப் பிரதேச மென்பந்து புங்குடுதீவு சென். சேவியர் சம்பியன்

வேலணைப் பிரதேச மட்ட பெண்களுக்கான மென்பந்துகிரிக்கெட்போட்டியில் புங்குடுதீவு சென்.சேவியர் அணி சம்பியனாகியது.

வேலணை பிரதேசசெயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்குடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக தற்போது பெருவிளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டியானது கடந்த மூன்றாம் திகதி புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. ஐந்து ஓவர்களைக்கொண்ட இம்மென்பந்து கிரிக்கெட் போட்டி அணிக்கு ஆறு பேரைக் கொண்டதாகும்.

இதில் முதலாவது அரையிறுதிப் போட்டியில்புங்குடுதீவுபாரதி அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் அணி மோதியது. இதில் துறையூர் ஐயனார் அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

மற்றைய இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் புங்குடுதீவு சென்சேவியர் அணியும் புங்குடுதீவு சண் ஸ்ரார் அணியும் மோதின. இதில் புங்குடுதீவு சென்.சேவியர் அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

இறுதிப் போட்டியில் புங்குடுதீவு சென்.சேவியர் அணியும், துறையூர் ஐயனார் அணியும் மோதின. இதில் சிறப்பான முறையில் செயற்பட்ட புங்குடுதீவு சென். சேவியர் அணி ஐயனார் அணியை வீழ்த்தி பிரதேச மட்ட சம்பியனானது. இப்போட்டி நிகழ்வில் வேலணைப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் மயூரன் மற்றும் யாழ். விளையாட்டுச் செயலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள், விளையாட்டுக்கழகத்தலைவர்கள், ஆதரவாளர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்துகொண்டுபோட்டியைக் கண்டு களித்தனர். (93)



# போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கான கரப்பந்து வடமாகாண சபை அணி சம்பியன்





(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களின் பிராந்திய அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் வடமாகாண போக்குவரத்து ஊழியர் அணி சம்பியனானது.

இலங்கை போக்குவரத்துச் சபை தனது ஊழியர்களின் பிராந்திய அணிகளுக்கிடையில் 21ஆவது தேசிய விளையாட்டு விழாவினை இவ்வருடம் நடத்தி வருகின்றது.

தேசிய விளையாட்டு விழாவில் கரப்பந்தாட்டப் போட்டிகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கரப்பந்தாட்டத் திடலில் கடந்த சனிக்கிழமை முதல் நடத்தி வந்தது. போட்டிகளின் இறுதி மற்றும் மூன்றாமிடத்திற்கான போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் வடமாகாண போக்குவரத்து சபை ஊழியர் அணியினை எதிர்த்து நடப்புச் சம்பிய அணியாகிய வயம்ப போக்குவரத்து ஊழியர் அணி மோதியது. இப்போட்டியில் சிறப்பாக விளையாடிய வட மாகாண போக்குவரத்து ஊழியர் அணி 3:1 என்ற செற்களில் வென்று சம்பியனாகியது.

மூன்றாமிடத்தினை கொழும்பு மெட்ரோ போக்குவரத்து ஊழியர் அணி பெற்றுக் கொண்டது. (93)

விளையாட்டுச் செய்திகள்

# வென்றது மத்திய கல்லூரி

(யாழ்ப்பாணம்)

நயாளகந்த நதுவோதய மகாவித்தியாலய அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி நான்கு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் 13 வயதுப்பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையிலான 50 பந்துப்பரிமாற்றங்கள் மட்டுப்படுத்தப்பட்ட துடுப்பாட்டப் போட்டிகள் தற்போது தேசிய ரீதியில் நடைபெற்று வருகின்றன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற போட்டியில் மின்னேரியா-நயாளகந்த நவோதய மகா வித்தியாலய அணியினை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட முடிவு செய்தது. அதற்கிணங்கக் களமிறங்கிய நயாளகந்த நவோதயா அணி 30.2 பந்துபரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுக்களை இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் அஸங்க 27, கவிந்த 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் மதுசன், அன்டர்ஸன் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

107 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்தி கல்லூரி அணி 26.2 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் மதுசன் ஆட்டமிழக்காமல் 49 ஓட்டங்களையும், தனுஜன் 16 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் துமிந்த 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

# அரையிறுதியில் கொக்குவில் கே.சி.சி.சி.

(கொக்குவில்)

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு கொக்குவில் கே.சி.சி.சி. அணி தகுதிபெற்றுள்ளது. கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் யாழ். மாவட்ட கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் சனி, ஞாயிறு தினங்களில் கொக்குவில் இந்து, யாழ். இந்துக் கல்லூரி மைதானங்களில் நடைபெற்று வருகின்றன. இதில் கடந்த சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் கொக்குவில். கே.சி.சி.சி. அணியும், திருநெல்வேலி அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய திருநெல்வேலி அணி 29.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லவகாந் 25, கோபி 20, பிரபு 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பவிதரன், பங்குஜன், ராகுலன் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு 142 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொக்குவில் கே.சி.சி.சி. அணி, 21.1 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சத்தியன் 58, பங்குஜன் 35 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்கு வித்திட்டனர். பந்து வீச்சில் லவன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (54)



# ஜே.ராஜா முகம்மது எழுதிய, "புதுக்கோட்டை மாவட்ட வரலாறு" என்ற நூலிலிருந்து...

கப்பத் தொகை 16 ஆயிரத்து 550, மே 31, 1798 வரை பாக்கி இருப்பதாகவும், அத்தொகையை உடனடியாக கட்டும்படியும் கட்டபொம்மனுக்கு மதுரை கலெக்டராக இருந்த ஜாக்சன் எச்சரிக்கை கடிதம் அனுப்பி வைத்தார்.

ஆனால், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பாக்கியை செலுத்தவில்லை கட்டபொம்மன். இதனால், பாஞ்சாலக்குறிச்சியின் மீது படையெடுக்க விரும்பினார் ஜாக்சன். அப்போது, ஆங்கிலேயே படை, திப்பு சுல்தானுடன் போரில் ஈடுபட்டிருந்ததால், இதற்கு உடன்படவில்லை. மாறாக, கட்டபொம்மனை ராமநாதபுரத்துக்கு அழைத்துப் பேசுமாறு பணித்தது.

இதன்படி, தன்னை ராமநாதபுரத்தில் ஆகஸ்ட் 18, 1798இல் சந்திக்கும்படி கட்டபொம்மனுக்கு கடிதம் எழுதினார் ஜாக்சன். இந்தக் கட்டளையை அனுப்பிவிட்டு, திருநெல்வேலி பகுதியில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள, ராமநாதபுரத்தில் இருந்து புறப்பட்டார் ஜாக்சன்.

அப்போதே ஜாக்சனைச் சந்திக்க, கட்டபொம்மன் தன் பரிவாரங்களுடன் சென்றார். குற்றாலத்தை ஜாக்சன் அடைந்த போது, கட்டப்பொம்மனும், அவரது பரிவாரங்களும், ஜாக்சனுக்காக காத்திருந்தனர். கட்டபொம்மனை அங்கு சந்திக்க மறுத்து விட்டார் ஜாக்சன்.

பின், சொக்கம்பட்டி, சிவகிரி, ஸ்ரீவில்லிபுத்தூர் போன்ற இடங்களிலும் சந்திக்க முயன்று, தோற்று, பயணம் தொடங்கி, 23 நாள் கழித்து, 640 கி.மீ. அலைந்து செப்.19, 1798இல் ராமநாதபுரத்தில் ஜாக்சனை சந்தித்தார் கட்டப்பொம்மன்.

கிஸ்தி கணக்கை சரி பார்த்தபோது, 5,000 (1080 பகோடா) ரூபாய் மட்டுமே பாக்கி இருப்பதை கண்டு கொண்டார் ஜாக்சன். ஆகவே, மே 31, 1798இற்கும் செப். 31, 1798இற்கும் இடைபட்ட மூன்று மாத காலத்தில் கட்டப்பொம்மன், 11 ஆயிரம் ரூபாய் கிஸ்தி பண பாக்கியை கட்டிவிட்டதாக அறிகிறோம்.

அகந்தை கொண்ட ஜாக்சன், மேற்படி சந்திப்பின் போது, கட்டப்பொம்மனையும், அவரது அமைச்சர்களையும் மூன்று மணி நேரம் நிற்க வைத்தே விசாரணை செய்தார். சந்திப்பின் இறுதியில், ராமநாதபுரம் கோட்டையிலேயே அவர்கள் தங்கியிருக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

இதைத் தொடர்ந்து ஏற்பட்ட கைகலப்பில், கட்டப்பொம்மன் தப்பிக்கும் முயற்சியில், லெப்டினன்ட் கிளார்க் என்பவர் கொல்லப்பட்டார். கட்டப்பொம்மனின் அமைச்சர் சிவசுப்ரமணிய பிள்ளை கைது செய்யப்பட்டார். கட்டப்பொம்மன் தப்பித்துக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின், கட்டப்பொம்மன், சென்னை கவர்னருக்கு, மேல் முறையீட்டுக் கடிதம் ஒன்று அனுப்பினார்...


கவர்னருக்கு அனுப்பிய கடிதத்தில், தான் கலெக்டரின் கட்டளைக்கு மதிப்பளித்து அவரைச் சந்திக்க, பாக்கி இருந்த முழு கிஸ்தி பணத்தையும், ராமநாதபுரத்துக்கு எடுத்துச் சென்றதாகவும், அங்கு ஏற்பட்ட கைகலப்பிற்கு, ஜாக்சனின் நடவடிக்கைகளே காரணம் எனவும் குறிப்பிட்டிருந்தார். கடிதத்தை கண்ட கவர்னர் கிளைவ், தற்காலிகமாக ஜாக்சனை பதவி நீக்கம் செய்தும், சிவசுப்ரமணிய பிள்ளையை விடுதலை செய்தும் ஆணை பிறப்பித்தார். அத்துடன், ராமநாதபுரம் நிகழ்ச்சிகளை குறித்து விசாரிக்க, வில்லியம் பிரவுன், வில்லியம் ஆரம், ஜான் காசா மேஜர் ஆகியோர் அடங்கிய ஒரு குழுவையும் நியமித்தார்.

இக்குழுவின் விசாரணையில் (டிச.15,1798) ராமநாதபுரத்தில், கட்டபொம்மனை, ஜாக்சன் நடத்திய விதம் ஏளனத்திற்குரியது என்று தெரிய வந்தது. விசாரணைக் குழுவின் முடிவு ஏற்கப்பட்டு, பதவியில் இருந்து ஜாக்சன் நீக்கப்பட்டார். அவரது இடத்தில் லூசிங்டன் என்பவர் கலெக்டராக நியமிக்கப்பட்டார்.



(அப்படியானால், கட்டபொம்மன் படத்தில் சிவாஜி கணேசன் பேசிய வசனமெல்லாம் சும்மா தமிழ் மனதின் திருப்திக்காகத்தானா?)

# கனடாவிலுமா?



World literacy of canada என்ற அமைப்பு வெளியிட்டிருக்கும் ஒரு புள்ளிவிபரத்தின்படி, கனடாவிலும் கல்வியறிவு வளர்ச்சி கவலைப் படும் அளவிலேயே உள்ளது எனத் தெரிய வருகிறது. ஆமாம், முன்னேறிய நாடு களின் வரிசையில் நிற்கும் கனடா நாட்டின் கதை யைக் கேளுங்கள்... கனடா நாட்டு மக்களில், 50 இலட்சம் பேருக்கு எழுதப் படிக்கத் தெரியாது! (கனடாவின் மொத்த மக்கள் தொகை, இரண்டு கோடி 70 இலட்சம். இவர்களில் படிக்கத் தெரியாதவர்களின் சதவீதம் 19.)

கல்வி அறிவு இல்லாத கனடாக்காரர்களில், 15 இலட்சம் பேருக்கு, தம் கார் சாரதி அனுமதிப்பத்திரம் எப்போது காலாவதியாகி றது என்பதை, அனுமதிப்பத்திரத்தைப் பார்த்து அறிந்து கொள்ளும் திறமை கிடையாது!

இவர்களில் 26 இலட்சம் பேருக்கு, மருந்து, மாத்திரை போத்தல்களில், அவற்றை எவ்வாறு உட்கொள்ள வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதை அறிந்து கொள்ளும் திறன் கிடையாது!

சாலையில் உள்ள வழிகாட்டும் சின்னங்களில் எழுதப்பட்ட எழுத்துக்களைப் படித்து அறியும் திறன், 28 இலட்சம் பேரிடம் இல்லை!


இன்னும் சில இலட்சம் பேரிடம் டெலிபோன் பில்லைப் பார்த்து, அதில் கட்டவேண்டிய தொகை எவ்வளவு என்பதை அறிந்து கொள்ளும் திறன் கிடையாது. இதேபோல, வருமானவரி மீதி அறிதல், டெலிபோன் டிரெக்ட்ரியில், "மஞ்சள் பக்கம்" பார்த்து, முகவரி அறிதல் போன்றவை தெரியாது.

இன்னொரு ஆச்சரியமான கணக்கெடுப்பு... கனடாவில் குடியே றிய இங்கிலாந்து நாட்டு மக்களை விட, கனடா வில் வசிக்கும் தெற்கு ஆசிய மக்கள் கல்வியில் சிறந்தவர்களாகவும், முன்னேறியவர் களாகவும் உள்ளனர்.

தெற்கு ஆசிய மக்களில், இலங்கை மற்றும் இந்தியர்கள் சிறப்பான இடத்தை வகிக்கின்றனர். கல்வி அறிவு அற்ற கனடா நாட்டு மக்களால், கனடா அரசுக்கும், வியாபாரிகளுக்கும் தினமும் பல இலட்சம் பொருள் நஷ்டம் ஏற்பட்டு வருகிறது... கல்வி அறிவை இவர்களிடம் வளர்க்க பெரும் பொருட் செலவு செய்து வருகிறது கனடா அரசு!

"கனடாவிலேயே இந்த நிலை தானே..." என, நாம் ஆசுவாசப்பட்டுக் கொள்ள வேண்டாம். கல்வி அறிவு அற்றவர்களால் கனடாவுக்கு பல கோடிக்கணக்கில் இழப்பு என்றால், வளர்ந்து வரும் நம் இழப்பு பல விதங்களிலும் எவ்வளவு என நினைத்துப் பாருங்கள்!

# வெள்ளரிக்காய்!



- 3000 ஆண்டுகளுக்கு முன் வெள்ளரிக்காய் தோன்றியது.
- இதனுடைய அறிவியல் பெயர் "குக்குமிஸ் சாடி வாஸ்" என்பதாகும்.
- இது மலைப் பகுதியில் நன்கு வளரும் தாவர வகையைச் சார்ந்தது.
- இமயமலையில் "சிக்கிம் வெள்ளரி" எனும் பெயருடைய வெள்ளரிக்காய் 15 அங்குல நீளமும், 6 அங்குல கனமும் கொண்டிருக்கும்.
- ஜமைக்காவில் வெள்ளரியின் அளவும் நிறமும் எலுமிச்சை போன்று இருக்கும்.
- அறிவியலாளர்கள் வெள்ளரிக்காயை பழவகையிலும், மக்கள் காய்கறி வகையிலும் வைத்துள்ளனர்.
- கிழக்கிந்திய நாடுகளில் வாசனைக்காக வெள்ளரியை அதிகம் பயிரிடுகின்றனர்.

**('காய்கறிகளின் ஆய்வு' என்ற நூலில்)**

# நேருவின் ஆர்வம்

இந்தியப் பிரதமராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அழகியல் உணர்ச்சி மிக்கவர். அவர் உண்பதிலும், உடுத்துவதிலும் ஒரு நேர்த்தி காணப்படும். அவர் காதலும் பிரசித்தமானது. பாரசீக-உருதுக் கவிதைகள் என்றால் நேருவுக்கு உயிர். ஒரு சமயம் காங்கிரஸ் கட்சிக்குத் தலைவராக இருந்த மௌலானா அபுல் கலாம் ஆசாத்,

"எந்த நிலையை எடுப்பது என நான் திகைத்துப் போய் நிற்கிறேன்!

என் இதயம் எழுப்பும் குரலை எதிரொலிப்பதா?

என் இதயம் கவர்ந்தவர்களின் குரலையா?"

என்று ஒரு உருதுக் கவிதையை வாசித்தார். இக்கவிதையை மிகவும் நேசித்த நேரு தனக்கு நேரும் இக்கட்டான நிலை களை விளக்கி தன் நண்பர்களுக்கு எழுதிய கடிதங்களில் எல்லாம் இக்கவிதையை எழுதினார்.



3 - (1)

# பத்தாண்டுகளின் பத்து இயக்குனர்கள்

சார்லஸ்

## ஸ்டீவன் ஸோடர்பெர்க்




2001ஆம் ஆண்டு ஒஸ்கார் விழாவின் சிறப்பம்சமே ஒரே இயக்குனரின் இரு படங்கள் முக்கிய விருதுகளுக்காகப் போட்டியிட்டதுதான். அவை traffic மற்றும் erin brockovich இயக்கியது அமெரிக்கரான ஸ்டீவன் ஸோடர்பெர்க். "ட்ரா.்.பிக்" படம் ஸ்டீவன் ஸோடர்பெர்க்குக்கு சிறந்த இயக்குனர் விருதையும், டெல் டோராவுக்கு சிறந்த நடிகர் விருதையும், மேலும் திரைக்கதையாசிரியருக்கும் படத்தொகுப்பாளருக்கும் விருதுகளைப் பெற்றுத்தந்தது. "எரின் புரோகொவிச்" படம் ஜூலியா றொபேர்ட்ஸ் - இற்கு சிறந்த நடிகைக்கான விருதைப் பெற்றுத்தந்தது.

"ட்ரா.்.பிக்", ஆவணப்படமெடுக்கும் பாணியைப் பின்பற்றி பெரும்பாலும் கையில் கமராவைச் சுமந்து எடுத்தது. அதிலும் இயக்குனரே படமெடுத்திருக்கிறார். மெக்ஸிக்கோ நாட்டிலிருக்கும் போதைப்பொருள் கடத்தல் கும்பல்கள், அமெரிக்க இளைஞர்களிடம் பரவியிருக்கும் போதைப்பொருள் கலாசாரம், அதற்கெதிரான அமெரிக்காவின் நடவடிக்கைகள் என்கிற விரிந்த தளத்தை மையமாகக் கொண்ட, ஒன்றுக்கொன்று தொடர்புடைய 4 தனித்தனிக் கதைகளை உள்ளடக்கியது இதன் திரைக்கதை.

மிகுந்த பொறுப்பு மிக்க, அமெரிக்க போதைப்பொருள் தடுப்பு ஆணையத்தின் தலைவராகப் புதிதாக நியமிக்கப்படும் ஒரு நீதிபதி (மைக்கேல் டக்ளஸ்) தனது சொந்த மகளே போதைக்கு அடிமையாகி சீரழிவதைப் பார்த்துக் கலங்கி நிற்கும் கதை முக்கியமானது. அந்த மகள் இறுதியில் ஒரு சேரிப் பகுதியில் போதைக்காகத் தனது உடலைவிற்று வாழ்கிறாள். அப்பா இதை வெளியில் சொல்ல முடியாமல், அவளைத் தெருத்தெருவாகத் தேடியலைகிறார். ஒரு சிறிய அறையில் வயதான ஆளோடு விபச்சாரம் செய்கையில் வந்து மீட்கிறார். நிர்வாணமாக போதை மயக்கத்தில் கிடக்கும் அவள், அரைக்கண் திறந்து அவரைப்பார்த்து, தான் எங்கிருக்கிறோம் என்றே தெரியாமல், குழந்தைபோலப் புன்னகைத்து "குட்மோர்னிங் டாடி" என்று சொல்ல, அவர் அடக்க முடியாமல் கதறி அழும் காட்சி உருக்கமானது. (நாம் ஒரு மாறுதலாக, இது தமிழின் "மகாநதி"யிலிருந்து சுட்டது என்று சொல்லிக்கொள்ளலாம்).

இறுதியில் நீதிபதி, தனது பதவியை ராஜினாமா செய்து விட்டுச் செல்கிறார். போதை மறுவாழ்வு மையத்தில் மகள் திருந்தியவளாகப்பேச, அதைக் கேட்டபடி அமர்ந்திருக்கும் நீதிபதியிடம், அமைப்பாளர் மைக்கைக் கொடுக்க, அவர் "நான் இங்கு பேச வரவில்லை.. கேட்க வந்திருக்கிறேன்" என்கிறார். கடத்தலும் கள்ளச் சந்தையும் ஒருவர் மாற்றி ஒருவரால், ஒருவழியை மூடினால் மறுவழியில் நடந்தபடியே தான் இருக்கும், நம் குடும்ப உறவுகளும், தெரிந்தவர்களும் போதைப் பழக்கத்துக்கு அடிமையாகாமல் காப்பதும் மீட்பதும், போதை ஒரு சமூகப் பழக்கமாக ஆகாமல் தடுப்பதுமே முக்கியமானது என்று காட்டுகிறது இந்தக் கதைத்தொடர்.




அடுத்த கதையில், மெக்ஸிகோவின் சிறுநகரம் ஒன்றின் காவல்துறை அதிகாரி (டெல் டோரோ) பெரும் போதைப்பொருள் கடத்தலொன்றைப் பிடித்து, தனிப் படையோடு அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கும் ஜெனரல் ஒருவரிடம் நற்பெயர் பெறுகிறான். அவருடைய கட்டளைப்படி அவர் ஒரு குறிப்பிட்ட கொலையாளியை (கொலின்ஸ்) பிடித்துக் கொடுக்கிறான். அந்த ஆளைச் சித்திரவதை செய்து, ஓபரகான் என்னும் போதைப்பொருள் கும்பலில் தொடர்புடையவர்களின் பெயர்ப்பட்டியலைப் பெறுகிறார்கள். ஜெனரலின் தனிப்படையும் காவலதிகாரியும் அந்தக் கும்பலின் முக்கிய புள்ளிகளை அழித்து அதன் செயல்பாட்டை முடக்குகிறார்கள். அதன் பிறகுதான் காவலதிகாரிக்கு ஜெனரலின் உள்நோக்கம் புரிகிறது. அவர் உண்மையில், இறந்துவிட்டதாகக் கருதப்பட்ட ஒரு பெரிய கடத்தல் மன்னனின் கைக்கூலி, அவனுக்காகவே ஓபரகான் கும்பலை அழித்திருக்கிறார்.

காவலதிகாரி ஒட்டுமொத்தமாக எல்லாரைப் பற்றிய இரகசியங்களையும், போதைப் பொருள் தடுப்பு ஆணையத்திடம் கையளிக்க முன்வருகிறான். அதற்குக் கைமாறாக எவ்வளவு பணம் வேண்டும் என்று அவர்கள் கேட்க, காவலதிகாரி தனது நகரத்திற்குப் போதுமான மின்சார வசதி செய்துதர வேண்டும் என்றும் இரவிலும் பேஸ்போல் விளையாடக் கூடிய விளக்குகள் கொண்ட மைதானம் அமைக்க வேண்டும் என்றும் கேட்கிறான். அதன் மூலம் இளைஞர்கள் இரவில் வீதிகளில் கும்பல்களாக சேர்வதும் குற்றங்களில் ஈடுபடுவதும் தடுக்கப்படும் என்று அவன் நம்புகிறான். இறுதியில், ஒரு பெரிய மைதானம் விளக்குகளில் ஜொலிக்க பெருந்திரளான இளைஞர்கள் பேஸ்போல் போட்டியைப் பார்த்துக் கொண்டிருக்க, அவர்களோடு காவலதிகாரியும் அமர்ந்திருப்பதோடு படம் நிறைவடைகிறது. டெல் டோரோ-வின் நடிப்பில் என்னை அசரவைத்தது அவர் துப்பாக்கியைக் கையாளும் விதம்தான், எதிராளியை விட தன் துப்பாக்கியையே அவர் அதிகமும் அஞ்சுவது போலிருக்கும்.




மூன்றாவது கதை, செல்வச் செழிப்பில் சொகுசாக வாழும் ஒரு பணக்காரக் குடும்பப்பெண் (கத்தரீன் ஸெற்றா ஜோன்ஸ்) பற்றியது. திடீரென்று ஓர்நாள் அவளது கணவன் கைதுசெய்யப்பட, அதிர்ந்து போகிறாள். அவள் நினைத்திருந்ததைப் போல அவன் ஒரு மதிப்புமிக்க தொழிலதிபனே அல்ல, பெரும் போதைப்பொருள் கடத்தல் வியாபாரி. மூன்று வயது மகனும் வயிற்றில் ஒரு குழந்தையுமாக இருக்கும் அந்தத் தாய், நிழலுலகம் பற்றி அதுவரை எதுவுமே தெரிந்திருக்காத அவள், தன்னிடம் பிரியமாகவே நடந்துகொண்ட கணவனையும், தான் வாழ்ந்த சொகுசு வாழ்வையும் இழக்க விரும்பாமல், அநீதியின் பக்கம் சாய்கிறாள். ஒரு தொழில்முறைக் கொலைகாரனிடம் (கொலின்ஸ்), அவள் தன் கணவனுக்கு எதிரான முக்கிய சாட்சியைக் கொல்லும்படி பேரம் பேசும் காட்சிகள் அதிர்ச்சிகரமானவை. சுயநலமான அன்பு எத்தனை ஆபத்தானது என்பதை உணர்த்துபவை.

நான்காவது கதை, இரு உளவுத்துறை அதிகாரிகளைப் பற்றியது. முந்தைய கதையில் வரும் போதைப் பொருள் கடத்தல் வியாபாரியைக் கைது செய்தது இவர்கள் தான். முக்கிய சாட்சியை இரகசிய இடத்தில் பாதுகாத்து வைப்பதற்கும், நீதிமன்றத்தில் சாட்சிசொல்ல வைப்பதற்கும், கடத்தல்காரனின் மனைவியின் நடவடிக்கையை வேவு பார்ப்பதற்கும், அந்த இளைஞர்கள் அர்ப்பணிப்போடும், கடமையுணர்வோடும் இரவு-பகலாகப் பணியாற்றுவது மலைக்கவைப்பவை. சாட்சியைக் கொல்ல முயன்ற முதல் முயற்சியில் இருவரில் ஒரு இளைஞன் இறந்து போக, இரண்டாவது முயற்சியில் சாட்சியே கொல்லப்பட அவர்களின் மொத்த உழைப்பும் வீணாகிறது. உயிரோடிருக்கும் ஒருவன் (டான் ஷீடில்) தோல்வி மற்றும் நண்பனின் மரணத்தால் விரக்தியடையாமல், இறுதியில் தனது உளவு வேலையை மெல்லிய புன்சிரிப்போடும் துள்ளலோடும் மீண்டும் ஆரம்பிப்பதாகக் காட்டப்படும் கட்டம், அற்புதமான திரைத் தருணம்.

.ட்ரா.்.பிக் படம், அதன் கதை, மிகச் சிறந்த நடிப்பு என்பனவற்றைத் தாண்டி, ஸோடர்பெர்க்-யின் யதார்த்தத்துக்கு மிக நெருக்கமான, ஆவணப்பட சாயலுள்ள திரைமொழிக்காகவும் பார்க்கப்படவேண்டியது.

**(தொடரும்)**

---

"ஷாட் ஓ.கேவா சார்?"

"நீங்க பாத்து ஓ.கே. சொல்லிட்டீங்கன்னா சரிதான்..."


"பையன் எப்படி....? ஓ.கேதானே...."

"கதையை ஓ.கே பண்ணிட்டீங்கன்னா ஷூட்டிங் ஆரம்பிச்சுடலாம்...."

நம்முடைய தினசரி வாழ்வில் இந்த ஓ.கேவுக்கு பற்பல பயன்பாடுகள். இடத்திற்குத் தகுந்தாற்போல அர்த்தம். இந்த வார்த்தையின் சரித்திரம் சுவாரஸ்யமானது.

"1840இல் மார்ட்டின் வான் ப்யூரன் (Martin Van Buren) என்பவர் அமெரிக்க ஜனாதிபதி. அவர் சொந்த கிராமம் (old kinderhook) நியூயோர்க் மாநிலத்தில் உள்ளது. அதனால் அவரை Martin old kinderhook Van Buren என்றும் அவரைச் சார்ந்த குழுவை "OK கிளப்" என்றும் அவரையே "ஓ.கே" என்று குறிப்பிட்டால் ஜனாதிபதி தயவுபெற்றது, அதனால் அது நிறைவேறிவிடும் என்பதிலிருந்து முதல் "ஓ.கே" பிரயோகங்கள் கிளம்பின..." என்கிறார்கள் சொல்லாராய்ச்சி அறிஞர்கள். "உலகிலேயே மிக வெற்றிகரமான, மிகவும் அறியப்பட்ட அமெரிக்கத்தனம் இதுதான்" என்கிறார் எச்.எல். மென்க்கன்.

ஆனால் OK என்பது Oll Correct என்கிற சொற்றொடரின் கொச்சை வடிவம் என்று சொல்பவர்கள் இருக்கிறார்கள். ஓகேஇற்கு மற்ற சரித்திர ஆதாரங்கள் சொல்பவரும் உண்டு. அதை ஒரு செவ்விந்திய மொழிச் சொற்றொடர் என்கிறார்கள். தந்தி பாஷையில் ஓகே என்றால் ஓப்பன் கீ. அதிலிருந்து, ஓகே வந்திருக்கலாம் என்கிறார்கள். ஓகே என்பது O.Kendall & sons கம்பெனியின் முத்திரை என்கிறார்கள். ஹெய்ட்டி தேசத் துறைமுகத்தின் பெயர் என்கிறார்கள். கிரேக்க பாஷையில் "ஒல்லா கெல்லா" என்றால் "எல்லாம் நல்லது" என்று அர்த்தமாம். அதை ஜெர்மன் வார்த்தையான "ஓபெர் கொம்மாண்டோ"விலிருந்து வந்தது என்றும் சொல்கிறார்கள்.




எப்படி வந்ததோ... இப்போது ஆங்கில மொழியின் சர்வதேசப் பரவலில் உலகையே ஆக்கிரமிக்கிறது இந்த ஓகே. சீன, ஜப்பானிய, கொரியர்கள் முதலில் அமெரிக்கா செல்லும்போது தெரிந்து கொள்ளும் ஒரேயொரு வார்த்தை ஓகேதான். விதவிதமாகத் தலையை ஆட்டி "ஓகே" என்பதை சம்மதத்திற்கும் சமாதானத்திற்கும் சந்தேக நிவர்த்திக்கும் பயன்படுத்திச் சமாளிக்கிறார்கள்.

**('OK வந்த கதை' என்ற கட்டுரையில் எழுத்தாளர் சுஜாதா)**

## யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் பல்துறை வளர்ச்சி

# நீச்சல் தடாகம் ஓராண்டுப் பூர்த்தி

## சிறப்புக் கண்ணோட்டம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிற் பயில்கின்ற மாணவர்கள் கல்வி, துடுப்பாட்டம், உதைபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டம், கரம் என்பனவற்றுடன் நீச்சல் தடாகத்தை அடிப்படையாகக் கொண்ட நீர்விளையாட்டுக்களையும் பயில முடியும். இக்கல்லூரிக்காகப் பாடுபட்ட மெதடிஸ்த திருச்சபையினரும், அதிபர்களும், ஆசிரியர்களும், பெற்றோரும், பழைய மாணவர்களும் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர்களாவர். எனினும் போர்க் காலங்களில் சீரழிந்த பாடசாலையை மீளக் கட்டியமைத்த அமரர் கணபதி இராசதுரையும், யாழ்ப்பாணத்திற்கு நீச்சல் தடாகத்தை மத்திய கல்லூரியில் அமைத்துத் திறந்து வைத்த மாண்புமிகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் உறுதுணையாய் இருந்த பொருளாதார அபிவிருத்தியமைச்சர் பசில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் புதல்வர் நாமல் ராஜபக்ஷ, கௌரவ ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி, சகல ஏற்பாடுகளையும் நேர் நின்று நெறிப்படுத்திய கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அவர் வழியில் தொடரும் பழைய மாணவர்களும் தனித்துப் பாராட்டப்பட வேண்டியவர்கள். பல்துறை வளர்ச்சியில் நீச்சல் தடாகத்தின் பங்களிப்பைச் சுட்டிக் காட்ட வேண்டிய தருணம் இதுவாகும்.

### தோற்றக் காரணம்

அமரர் க. இராசதுரையின் கல்விச் சிந்தனையும், சமூகநோக்கும், சகல பாடசாலை மாணவர் மீதான பற்றும் எதையாவது, புதிதாக அறிமுகப்படுத்திவிட வேண்டும் என்ற உத்வேகமும்தான் இந்த நீச்சல் தடாகத்தின் அத்திவாரமாகும். அவரது திட்டத்தில் நீச்சல் தடாகம் (வரைபடத்துடன்) பவிலியன், மாணவர் விடுதி என்பனவும் உள் ளடங்கியிருந்தனவென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### மீளத்தோற்றம்

பதில் அதிபராக கடமையாற்றிய செ. பத்மநாதன் காலத்தில் நீச்சல் தடாகத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இதற்கான பூர்வாங்க வேலைகள் மந்தகதியிலேயே நடந்தன. அதன் பின் அதிபராகப் பதவியேற்ற எல். ஓங்காரமூர்த்தியும் அடுத்த கட்டப் பூர்திக்காகப் பாடுபட்டார். எனினும் அது சவாலாகவே அமைந்தது.

### பூர்த்தியானமை

அமரர் க. இராசதுரையவர்களின் கல்வி, சமூகச் சிந்தனைகளை மனதிற் கொண்ட முழுநேர (24 hours) அதிபராக சி.க. எழில்வேந்தன் பாடசாலைக்கு அதிபராகக் கல்வி அமைச்சால் நியமிக்கப்பட்டார். அவர் கௌரவ ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி, மத்திய கல்லூரியின் பழைய மாணவரும், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமாகிய கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மூலம் அரசாங்க உதவிகளைக் கோரி 06-12-2012 திங்கட்கிழமை மாண்புமிகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிரசன்னத்துடன் நீச்சல் தடாகத்தைத் திறந்து வைத்தார்.

### பயன்பாடு

பல மாணவர்கள், பல்வேறு பாடசாலையினர், பல்கலைக்கழகத்தினர், தனியார் பலரும் இந்த நீச்சல் தடாகத்தில் பயிற்சி பெறுகின்றனர். நீராடி மகிழ்கின்றனர். யாழ்ப்பாணத்தில் வேறு நீச்சல் தடாகங்கள் உள்ளபோதும் சர்வதேச தரத்தில் அமைக்கப்பட்ட மலிவாகப் பயிற்சி பெறக்கூடிய, பாதுகாப்பு வேலி, பாதுகாப்பு காவலர்கள் உபகரணங்கள் (றப்பர் வளையம்) என்பவற்றைக் கொண்ட ஒரேயொரு நீச்சல் தடாகம் இதுவேயாகும். இதன் திறப்பு விழாவின் போது உரையாற்றிய கல்லூரியின் பழைய மாணவரும் முன்னைநாள் யாழ். பல்கலைக்கழக உடற்பயிற்சித்துறைப் பணிப்பாளருமான எஸ். கணேசநாதன், நீச்சலுக்கு மட்டுமன்றிப் பல்வேறு நீர்விளையாட்டுக்களுக்கும் இத்தடாகம் அடிப்படையாக அமையும் எனக் கூறியிருந்தார்.

### யாழ்ப்பாண மக்கள் செய்ய வேண்டியது

மக்கள் யாவரும் சரியான விழிப்புணர்வு பெற வேண்டும். ஒரு சுற்றுலா மூலமாவது நேரே வந்து பார்க்க வேண்டும். போரால் வெளிமாவட்டங்கள் குறைந்தது 20 வருட பின்னடைவு கண்டுள்ளன வென்றால், யாழ்ப்பாணம் 10 வருட பின்னடைவையாவது அடைந்துள்ளது என்பதை உணர வேண்டும் (கல்வியிலும் கூட). இதனை ஈடுசெய்து, வளங்களைப் பெற்றுப் பூரணமாகப் பயன்படுத்தி, கொழும்பு, கண்டி தரத்திற்கு உயர்ந்தாக வேண்டும்.

சகல பெற்றோரும் தமது பிள்ளைகளுக்கு கிணற்றில் விழுந்தால் உயிர் தப்பக்கூடிய இவ்வரிய நீச்சல் பயிற்சியைக் கட்டாயம் வழங்கவேண்டும். கடலில் நீந்துவது ஆபத்தானது. அண்மையில் நாவாந்துறைக் கடலிலும் கந்தரோடைக் குளத்திலும் கூட இரு மாணவர் பலியாகினர். ஆனால், நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பான நீச்சற் பயிற்சியை வழங்க உடன் முன்வாருங்கள். வணிகர்கள், நலன் விரும்பிகள் இதன் அடுத்த கட்ட (நீர் விளையாட்டு) பயிற்சிக்கு ஆதரவு தாருங்கள். மருத்துவர்கள் நீச்சற் பயிற்சியின் ஆரோக்கியம் பற்றி உங்கள் மாணவர்களுக்கும், நோயாளர்களுக்கும் எடுத்துரைக்கவேண்டும். டாக்டர் நவநீதன் தனியாக நிறுவிய நீச்சல் தடாகம் இந்த நோக்கத்தை உடையதென்பதை எடுத்துக் கூறவேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

### நிறைவு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நீச்சல் தடாகம் 24 hours மணி நேர பாதுகாப்புடன் தற்போது சகலருக்கும் பயிற்சி வுழங்குகிறது. சகல தரப்பினரும் உடல் ஆரோக்கியமும் உற்சாகமும் பெற உறுதுணையாக உள்ளது.



இராசதுரை



எழில்வேந்தன்







நாக. தமிழிந்திரன்


# பாடசாலையின் துரித அபிவிருத்தி மாணவர்களின் கற்றலில் வளர்ச்சி

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கிளிநொச்சி கனிஷ்டமகா வித்தியாலய கட்டடங்கள் புனரமைக்கப்பட்டும் புதிதாக கட்டப்பட்டும் தற்போது புதுப்பொலிவுடன் காணப்படுவதால், மாணவர்களின் கல்விச்செயற்பாடுகள் சீரான முறையில் இடம் பெற்று வருவதாக பெற்றோர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

இப்பாடசாலை கடந்த யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்த நிலையில் காணப்பட்டது. இதன்பின்னர் மக்கள் மீள்குடியேறியதைத் தொடர்ந்து இப்பாடசாலை படிப்படியாக அபிவிருத்தியடைந்து தற்போது புதுப்பொலிவுடன் காணப்படுகிறது.





இப்பாடசாலையின் வகுப்பறைக் கட்டடங்கள் சில புனரமைக்கப்பட்டும் சில புதிதாக அமைக்கப்பட்டும் உள்ளதால் மாணவர்கள் சிரமமின்றி கல்விச்செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பாடசாலையில் தற்போது 68 ஆசிரியர்களுடன் மற்றும் 2250 மாணவர்கள் கல்வி பயின்றும் வருவதுடன் 2012 க.பொ.த உயர் தரப்பரீட்சையில் 62 மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகியுள்ளதாகவும் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இப்பாடசாலைக்கு தனிநபர் ஒருவரால் சரஸ்வதி சிலையும் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். (140)

# வீதிச் சமிக்ஞை குறியீடுகள்; விபத்துக்களை தடுக்க உதவவேண்டும்

## சாரதிகள் கோரிக்கை

(கல்வயல்)

யாழ்ப்பாணத்திற்கு வரும் ஏ-9 பிரதான வீதியில் பாலங்களிற்கான தடுப்புக்கள் புதிதாக இடப்பட்டுள்ளன. அவைகளை காட்டும் சமிக்ஞைப் படங்கள் பாலங்களிற்கு மிக அருகாமையில் இடப்பட்டுள்ளன. வீதிகளில் புதிதாக வெளிமாவட்டங்களிலிருந்து வாகனங்களைச் செலுத்து வரும் சாரதிகளின் கவனத்திற்கு உட்பட்டு சில வினாடிகளில் பம்மிங்கை சந்திப்பதால். தடுப்புகள் திடிரென அழுத்தப்படுவதால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக பாதிக்கப்படும் சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

ஏ-9 வீதி அகலப்படுத்தப்பட்டு காப்பற் வீதியாக செப்பனிடப்பட்டு பூர்த்தி செய்யப்படும் நிலையில் உள்ளது. இந்த வீதியில் தற்போது பொருத்தமான இடங்களில் வீதிக்குறியீடுகள் அமைக்கப்பட் வருகின்றன.

நாட்டின் சகல மாவட்டங்களிலிருந்தும் யாழ்ப்பாணத்திற்கு வருவோர் தொகை அதிகரித்துள்ளது அதிலும் குறிப்பாக சுற்றுலாப் பயணிகளின் வருகை சடுதியாக அதிகரித்துள்ளது. எனவே இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டோர் விபத்துக்கள் ஏற்படாதவாறு தடுக்க விரைவாக ஏற்பாடுகளை செய்யவேண்டும் என அச்சாரதிகள் கோருகின்றன. (கா)

# பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்கள பரீட்சை எதிர்வரும் மார்ச்மாதம் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை மூன்று மொழிகளிலும் நடத்தப்படவுள்ளதுடன் கொழும்பு, கந்தானை, அம்பாந்தோட்டை, களுத்துறை, காலி, பதுளை, குருநாகல், அநுராதபுரம், இரத்தினபுரி, கண்டி, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், அம்பாறை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ளது.

இதுவரை இப்பரீட்சையைப் பூரணப்படுத்தாத ஆரம்ப தரத்தின் வைத்திய உத்தியோகத்தர்களும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களும் மட்டும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் (பரீட்சை சுகாதார அமைச்சு சுவசிரிபாய கட்டடம், இல. 385, வண. பத்தேக விமலவன்ச தேரர் மாவத்தை, கொழும்பு -10 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

□ □ □

புத்ததாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கதிர்காமம் இந்து யாத்திரிகர் விடுதிக்கு உதவிப்பொறுப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமைமிக்கவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப்போட்டி சிங்களம் மற்றும் தமிழ்மொழியில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இல. 248, 1/1, காலி வீதி, கொழும்பு-04 என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும். இப்பரீட்சைகளுக்கான மேலதிக விபரங்களை 2013.02.01 வர்த்தமானியிலோ அல்லது தினமுரசு காரியாலயத்திலோ பார்வையிடமுடியும்.



மொனராகல திருமறைக்கலாமன்றத்தின் ஏற்பாட்டில் சிறுவர்களுக்கான கலாசார பரிமாற்ற செயற்திட்ட நிகழ்வு யாழ். திருமறைக்கலாமன்றத்தில் நடைபெற்றபோது, மொனராகல திருமறைக்கலாமன்ற சிறுவர்களுடன் பயிற்சி வளவாளர்கள் நிற்பதைக் காணலாம். (27)

# ஆயுர்வேதம்



## உடல் அதிகமாக மெலிவடைதல்

சிலருக்கு உடல் அதிக வேகமாக மெலிந்து கொண்டே வரும். இரவில் அதிக தடவை படுக்கையிலிருந்து எழுந்து சிறுநீர் போக வேண்டியிருக்கும். எவ்வளவு சாப்பிட்டாலும் சாப்பிட்டது போன்ற உணர்விராது. சாப்பிட்ட சில விநாடிகளில் உணவு எங்கே போனதென்றே தெரியாது. அடிக்கடி நாவறட்சி ஏற்படும். எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தால் நுரையீரல் சுருங்கிவிட்டது தெரியும். வயதானவர்களுக்கு இதுபோன்று ஏற்படுவதுண்டு.

சிறுநீரகங்களின் வழியே வெளியேறும் சில சத்தான பகுதிகளை மறுபடியும் உறிஞ்சும் சக்தியை சிறுநீரகங்கள் பெற்றுள்ளன. அநேகமாக அவை உறிஞ்சப்படாமல் சிறுநீரின் மூலம் வெளியேறுவதால் இந் நிலைமை தோன்றுகிறது. அதுபோலவே உணவை உள்ளே வேகமாக இழுத்துக் கொண்டு, அதன் சத்தான பகுதியை உடல் பெறாமல், சிறுநீரின் மூலம் வெளியேறுவதாலும் உடல் மெலிந்து வருவதாக இருக்கலாம்.

உடலுக்குத் தேவையான ஒட்சிசன் வாயுவை நுரையீரல் சுருக்கத்தின் மூலமாக இழப்பதன் மூலம், அணுக்களின் வளர்ச்சியும், போஷணையும் தடைபடுகிறது. அவை தம் செயல்களில் மந்தமான தன்மையை அடைவதால், உயிரோட்டமுள்ள இந்த அணுக்களின் சிதைவு, உடல் மெலிந்து போவதற்குக் காரணமாகலாம். அதனால், உடலின் மிக முக்கிய பகுதிகளான சிறுநீரகங்கள், தமனிகள், அணுக்கள் ஆகியவற்றை வலுப்படுத்தி, அவற்றின் செயல்பாட்டை மறுபடியும் சுறுசுறுப்பான நிலைக்கும், ஆரோக்கியமான தன்மைக்கும் கொண்டு வர வேண்டிய நிர்ப்பந்தமிருக்கிறது.

உணவு வேகமாகச் செரிப்பதால், எளிதில் செரிக்கக் கூடிய உணவு வகைகளால் நன்மை ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை. எளிதில் செரிக்காத அதே சமயத்தில் உடல் உட்புறப் போஷணைக்கு உதவும் உணவுதான் நன்மை தரும் என்பதால், இந்த அறிகுறிகள் உள்ளவர்கள் காலை உணவாக, முந்திரி, பாதாம் என்ற வகையில் கடையில் விற்கப்படும் சத்துமாவை வாங்கி, நன்றாகத் தூளாக்கி, கஞ்சி காய்ச்சி, தண்ணீர் கலக்காத ஆடைகளுடன் கூடிய சூடான பாலுடன் கலந்து, சீனி சேர்த்து காலை உணவாகச் சாப்பிட நல்லது.

காலையில் 10 மணிக்கு அத்திப் பழம், பாதாம் பருப்பு, அக்ரோட் பருப்பு, பிஸ்தாப் பருப்பு, சாரப் பருப்பு, பூனைக்காலி விதைப் பருப்பு, அப்பிள் விதை, ஏலக்காய், கற்கண்டு இவற்றை சமன் எடையாக எடுத்துக்கொண்டு, அனைத்தையும் சேர்த்து அரைத்து, பசுவின் நெய்யில் கலந்து, அத்துடன் சிறிது குங்குமப்பூ சேர்த்து ஒருவாரம் ஊறிய நிலையில் உள்ளதைச் சுமார் 15 - 20 கிராம் வீதம் சாப்பிட்டு வரலாம். இதனால் நல்ல உடல் பலம், புஷ்டி, வீரியம் பெருகும்.

மதியம் 12 மணிக்கு இரண்டு செவ்வாழைப் பழம் அல்லது இரண்டு ரஸ்தாளி வாழைப்பழம் சாப்பிடவும். நெய்ப்புத் தன்மையும், குளிர்ச்சியும் உள்ள இவை சற்றே தாமதித்து ஜீரணமாகும் தன்மை வாய்ந்தவை. மலத்தின் அளவை அதிகரிக்கச் செய்து வெளியேற்ற உதவுவதுடன், உடலில் போஷணைக்கு வேண்டிய உணவுப் பகுதிகளை வெளியேற்ற விடாது தடுத்து நிறுத்தும் சக்தியும் வாய்ந்தவை.

மதியம் 1 மணிக்கு மாமிச சூப் வகை உணவுகளை சூடான சோற்றுடன் கலந்து சாப்பிட்டு, பஞ்சாமிர்தம் 15 - 20 கிராம் சாப்பிட வேண்டும்.

மாலை 4 மணிக்கு, பேரீச்சம்பழம் 8 -10 சுளைகள் சாப்பிடவும். உள்ளுறுப்புகளுக்கு நெய்ப்பும், போஷணைகளையும் உண்டாக்கும். உடலுக்கு வலுவும், புத்துணர்ச்சியையும் கொடுக்கக் கூடியது.

இரவு 7 மணிக்கு பாலிலிருந்து தயாராகும் இனிப்புவகை எதையாவது சாப்பிட்டு, இரவு உணவாக பாஸ்மதி அரிசிச் சோறும், இறைச்சியும் சேர்க்கப்பட்ட பிரியாணி சாப்பிடலாம். இரவில் படுக்கும் முன் சீனி கலந்த சூடான பால் சாப்பிட வேண்டும்.

இதுபோன்ற உணவு வகைகளால் உடல் புஷ்டியாகும். நாவறட்சி நீங்கும். மெதுவாகச் சமிபாடடைவதால் சாப்பிட்ட திருப்தி ஏற்படும். உடல் உட்புற உறுப்புகள் நன்கு வலுப்பெறும். மேற்குறித்த உடல் உபாதைகள் குறையும்.

# வியாபார உரிமச் சான்றிதழ் பெறாத உரிமையாளர்கள் மீது நடவடிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வியாபார ஸ்தானங்களின் உரிமம் வழங்குவது தொடர்பான பொது சுகாதார பரிசோதனைகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாண்டுக்கான வியாபார உரிமம் வழங்குவதற்கான பரிசோதனைகள் சுகாதார பரிசோதகர்களினால் மட்டுவில், கைதடி, நுணாவில், வேம்பிராய், வரணி, கொடிகாமம், மந்துவில் என பிரதேச சபைக்கிராமங்களில் தற்போது மேற்கொள்ளப்படுவதாக பிரதேச சபை பொது சுகாதார பரிசோதகர் தெரிவிக்கின்றார்.

வருடாந்த உரிமம் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பெறப்படவேண்டும். அதற்கு வியாபார தகுதிகாண் சான்றிதழ் பெறுவதற்காகவே இவ்வாறு திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தகுதியற்ற உணவகங்கள், சிகையலங்கரிப்பு நிலையங்கள், பல்பொருள் கடைகள், சலவையகம் என்பன தகுதியடிப்படையில் புனரமைக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் வியாபார உரிமம் பெறப்படாதவிடத்து வியாபார உரிமையாளர் மீது வழக்கு தொடரப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதார பரிசோதகர்களின் அறிவுறுத்தலுக்கும், சட்டவிதிகளுக்கும் அமைய தமது தகுதிகாண் சான்றிதழ்களைப் பெற்று வருடாந்த உரிமத்தை பெற்றுக் கொள்ளுமாறு சுகாதார பரிசோதகர்கள் தெரிவிகின்றனர்.

(இ)

# இடைவிலகிய மாணவர்கள் கல்விசெயற்பாடுகளில் இணைப்பு

(அச்சுவேலி)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக நிர்வாகப் பிரிவிற்கு உட்பட்ட பிரதேசங்களில் வசித்து வரும் குடும்பங்களில், பாடசாலைக்குச் செல்லாத மற்றும் இடைவிலகிய 16 வயதிற்குட்பட்ட மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் கற்றல் செயற்பாடுகளில் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் பிரதேச செயலக ஒன்றிணைந்த கல்விக் குழுவினால் மிகவும் முனைப்புடன் நடைபெற்று வருவதனைக் காணக் கூடியதாக உள்ளது.

கோப்பாய் பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெற்று வரும் இந்த நடவடிக்கையில், குறிப்பிட்ட பிரதேசத்தின் கிராம சேவையாளர்கள்; சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பட்டதாரிப் பயிலுநர்கள் எனப் பலரும் ஒன்றிணைக்கப்பட்டிருப்பதுடன் தற்போது இந்நடவடிக்கைகள் மேலும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இக்குழுவினரின் தீவிர நடவடிக்கையினால் பாடசாலைக்குச் செல்லாது வீடுகளில் தங்கியிருந்த மாணவர்கள் பலர் பெற்றோரின் உதவியுடன் பாடசாலைகளுக்கு மீண்டும் அனுப்பிவைக்கப்பட்டுள்ள அதேவேளை, வீடுகளில் இருந்து புறப்பட்டு வேறு இடங்களில் தங்கியிருந்த மற்றும் இக்குழுவினரைக் கண்டு தப்பியோட முயன்ற பல மாணவர்களும் இவர்களால் விரட்டிப்பிடிக்கப்பட்டு, அவர்களுக்கு பல நல்லுரைகள் வழங்கப்பட்டு இவர்களையும் பாடசாலைகளிற்கு கற்றல் செயற்பாடுகளுககு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்படி நடவடிக்கையின் காரணமாக கடந்த வாரத்தில் மட்டும் கோப்பாய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சுமார் 100 மாணவர்கள் வரை பாடசாலைகளுக்கு செல்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இதேவேளை கிராமப்புறப் பிரதேசங்களில் உள்ள பெற்றோர்களுக்கு பிள்ளைகளின் கல்வி எவ்வளவு முக்கியமானது என்பது பற்றியும் பிள்ளைகளை ஒழுங்கான முறையில் பாடசாலைகளுக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுரைகளும் வழங்கப்பட்டுள்ளன.

(03)

## பரமர் சங்கமம்



'தின்னக் குடிக்கத் தெளிவெண்ணெய் மாதிரி' என்று சிலரைப் பற்றிக் கூறுகையில் இவ்விதம் ஒப்பீட்டளவில் குறிப்பிடுவதுண்டு.

தெளிவெண்ணெய் எண்டால் ஆமணக்கெண்ணெய் எண்டும் பொருள்படும். அந்தக் காலத்தில் பாடசாலைகளில் பேதிக்கு வழங்கப்பட்டும் வந்தது. இப்ப அறவே இல்லாமல் போயிட்டுது.

எண்டால் எண்ணெய் போய்விடவில்லைப் பேதிக்குப் பாவிக்கும் வழக்கந்தான். இந்தத்தெளிவெண்ணெய் எண்ணம் வந்தது, சந்திகளிலும், வீதிகளிலும் நிண்டு வம்பளக்கும் இளசுகளாலதான்.

இதுகள் சந்திகளில் நிண்டு என்னெல்லாம் செய்யுதுகள். போறவாற பெண்டுகள், வயோதிகருக்கு நக்கல் விடுவது மட்டுமே, பொழுது போக்காக மதுபானமும் வைச்சுக் குடிக்குதுகள்.

வசதியாக அளவான போத்தல், டின்களிலும் அவை வருவதால் வீதிக்கு வீதி காலிப்போத்தல், டின்கள் போடப்பட்டு சூழல் மாசடைவது இன்னொரு தண்டம்.

அந்தக்கால இளைஞர்களும் மதுபானம் பாவிச்சதுகள் தான், கண்காணா இடங்களுக்குப் போய் வந்ததுகள், இப்ப இதாலதான் வீதிகளில் மதுபானம் பாவிப்போர் கைது செய்யப்படுவர் எண்டு பொலிஸாரும் தெரிவிக்கினம்.

இந்தப் பழக்கம் ஒவ்வொரு காலங்களில் விதம்விதமாக மாறி வந்ததை பார்க்கலாம். எழுத்தாளர் கே.டானியலின் தம்பி ஒருவர் ஆனைக்கோட்டை பழம் வீதியில் வாழ்ந்தவர். சின்னமணி பேர்.

அவர் சொல்லுவார், கோப்றேசனுக்குக் கள்ளுக் குடிக்க மருமகன் போகேக்க மாமன் ஏற்கனவே இருப்பார். ஒரு மாதிரி மறைஞ்சுபோய் கள்ளொண்டடிச்சிட்டு மாமனுக்கு ஒருகள்ளுக் குடுக்கச் சொல்லிப் போட்டு ஆளையும் காட்டிப் போட்டுப் போயிடுவார்.

அடுத்த தடவை வந்து ஒரு பிளாவில் கள்ளை வாங்கி மாமனிடம் முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டு குடுத்திட்டுப் போவார். மூண்டாந்தடவை வெறி கூடியிடும்.

மாமனுடன் சமபந்தி போட்டுக் குடிக்க வெளிக்கிட்டு விடுவார் மருமகன். இது ஒருகால கட்டப் பழக்க வழக்கமாக இருந்து வந்தது.

அதேவேளை பெண் குடுத்த மாமனும், மாப்பிள்ளையும் ஒன்றாய் சேர்ந்து வந்து தோழர்களைப் போல கள் அருந்திப் போட்டுப் போன புதினங்களையும் கடந்த அனர்த்த காலங்களில் கண்டுமிருக்கிறம்.

இவ்விதம் வளர்ந்து வந்த எங்கடை பண்பாடு 1995இல் இடம் பெயர்வுக்குப் பின்பாக வன்னிக்குப் போய் மீண்டும் சொந்த மண்ணுக்குத் திரும்பிய போது சிறுவர்களாக இருந்தவர்கள் இளைஞராகி இந்தக் கோலங்கள் கொண்டிருக்கினம்.

படிப்பு, வேலை வெட்டி இல்லாமல் இளைய சமுதாயம் மாறியதற்கு மூத்தவர்கள் நாட்டு நிலைமையைப் பயன்படுத்தி சொந்த பந்தங்களின் உதவியாலோ வேறு மார்க்கமாகவோ வெளிநாடுகளுக்குப் போய் உழைத்து அனுப்பும் பணந்தான் பெரும்பாலான காரணங்களாக உள்ளன.

தாய், தேப்பன் கண்டிச்சால் போச்சு. இப்பெல்லாம் இளசுகளின் கண்டிப்பிலதான் ஒவ்வொரு வீடுகளும் நடத்தப்படுகுது. "நல்ல ஹோட்டல்ல சாப்பிட்டா" எல்லாம் சரியா ஜீரணமாகும். இல்லையே நான் சொல்றே...

## 150 ஆவது ஆண்டு விழா

(மருதனார்மடம்)

சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஆண்டு விழாவும் இந்து சமய எழுச்சி ஊர்வலமும் கடந்த வெள்ளிக்கிழமை தெல்லிப்பளை யூனியன் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்து ஸ்வயம் சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரார்த்தனைகள் நடைபெற்றதுடன், இதில் யாழ். மகாஜனாக் கல்லூரி அதிபர் திருமதி அனந்தசயன் மற்றும் யூனியன் கல்லூரி அதிபர், தெல்லிப்பளை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(17)

# வெளிமாவட்ட அறுவடை இயந்திரங்கள் யாழ்ப்பாணத்திற்கு படையெடுப்பு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் நெல் அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில் தற்போது அறுவடை செய்யும் இயந்திரங்கள் வெளிமாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்பட்டு அதிகளவில் பயன்படுத்தப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

தற்போது திடீரென மழை பெய்ய ஆரம்பித்த காரணத்தால் உடனடியாகவே அறுவடை செய்து நெல்லை தனியாகப் பிரித்து தரக்கூடிய இயந்திரங்களின் மூலம் அறுவடை மேற்கொள்ள விவசாயிகள் ஆர்வம் காட்டிவருவதால், அறுவடை செய்யும் இயந்திரங்கள் வெளி மாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்படுகின்றன.

இவ் இயந்திரத்தின் மூலம் அறுவடைசெய்து நெல்லைத் தரம் பிரித்து வழங்க ஒரு பரப்பிற்கு 450 ரூபா வீதம் தென்மராட்சிப் பகுதிகளில் அறவிடப்படுகின்றது. அதேவேளை வலிகாமம் பகுதிகளில் 500 ரூபா வரையும் அறவிடப்படுகிறது.

தனங்கிளப்பு, மறவன்புலோ, வரணிப் பகுதிகளில் இரவு பகலாக இவ் இயந்திரங்களின் மூலம் அறுவடை மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் அறுவடைசெய்யும் கூலித்தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உழவு இயந்திர உரிமையாளர்கள் சிலரும், வருமானம் தரும் சூட்டடி வேலைகள் இல்லை என்று கவலை தெரிவிக்கின்றனர்.

(இ)

# முரசின் இன்றைய பலன்

(06.02.2013 - புதன்கிழமை)

நந்தன வருஷம் மார்கழி மாதம் 17 ஆம் திகதி. நட்சத்திரம் கேட்டை சித்தம் முற்பகல் 11.31 வரை. திதி ஏகாதசி முன்னிரவு 9.33 வரை. இராகுகாலம் 12.35 - 2.05 வரை. சுபநேரம் 5.05 - 6.35 வரை. ஏகாதசி விரதம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | இனம்புரியாத குழப்பம் வந்து சரியாகும். தகுதிக்கு மீறிய செயல் வேண்டாம். தொழில் சிறக்கும். அதிக வரவு. பிள்ளைகளால் புகழ். உயர்ந்தோர் உதவுவர். புது வாகன பலன். |
| ரிஷபம் | செயல்கள் இனிதாக நிறைவேறும். சவால்கள் சாதகமாகும். தொழில், தாமத நிலை சரியாகும். தாராள பணவரவு. குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி. முன்னேற புதிய வழி பிறக்கும். |
| மிதுனம் | அறிமுகம் இல்லாதவரிடம் விலகுக. கவனக்குறைவால் பணிகளில் சிரமம். தொழில், சராசரி. வரவு செலவுக்கு ஆகும். புத்திரரின் படிப்புக்கு உதவி. எதிலும் நேர்மைக்கு அழுத்தம். |
| கடகம் | முன்னர் கேட்ட உதவி எதிர்பாராமல் கிடைக்கும். தைரிய சிந்தனை. தொழில் செழிப்பு. அதிக லாபம். புத்திரர் விரும்பியது செய்வீர்கள். புது நட்பு. குடும்ப அனுசரணை. சேமிப்பு. |
| சிம்மம் | உற்சாகம். புதிய புதிய திட்டமிடுவீர்கள். தொல்லை கொடுத்தவர், மாறுவர். தொழில், அபரிமித வளர்ச்சி. தாராள பணவரவு. அறப்பணி செய்வீர்கள். நித்திரையில் இனிய கனவு. |
| கன்னி | உங்கள் செயல்திறன் கண்டு, புதியவர் நட்பு. தொழில் சிக்கல்கள் தீரும். குடும்பத்தில் அமைதி. உபரி வருமானம். பெற்றோர் விருப்பம் நிறைவேற்றுவீர். விருந்து விசேஷ அழைப்பு. |
| துலாம் | பயண உணர்வு. உங்கள் சிரமத்தை பிறரிடம் சொல்ல வேண்டாம். உடன் பிறந்தவர்கள் ஆதரவு. தொழில், தடங்கல் சரியாகும். முக்கிய செலவுக்கு கடன். உடல் நலம் கவனம். |
| விருச்சிகம் | உங்கள் பேச்சு, சிலருக்கு வருத்தம். பொது இடத்தில் நிதானம் நல்லது. தொழில், போட்டியில் வெல்ல கூடுதல் பணி. குறைந்த பணவரவு. கவனக்குறைவால் உடல்நலக் கேடு. |
| தனுசு | பணிகளை தாமதமின்றி பூர்த்தி செய்வது நல்லது. தொழில், சராசரி. வரவு முக்கிய செலவுக்கு. உறவினருடன் விவகாரம் வேண்டாம். சமூகத்தில் பாராட்டு. இஷ்ட தெய்வ வழிபாடு. |
| மகரம் | குடும்பத்தினரிடம் பரிவு. நற்செயல்களில் ஈடுபாடு. அதிக வேலை. தொழில், மந்தநிலை. சேமிப்பு செலவுக்கு. பயணத்தில், பாதுகாப்பு கவனம். கல்யாணப் பேச்சு. நண்பர் உதவி. |
| கும்பம் | மனதில் தெய்வீக சிந்தனை. தொழில், திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். சராசரி பணவரவு. உத்தியோகத்தர்களுக்கு பாராட்டு, வெகுமதி. தெளிவான சிந்தனையுடன் செயற்பாடு. |
| மீனம் | மனதில் ரசனைத்திறன். நடை, உடை பேச்சில், வசீகரம். தொழில், உயரும். தாராள பணவரவு. குடும்பத் தேவை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த சுபசெய்தி வரும். அன்பு மனம். |

5) பின்வரும் எண் கோலங்களில் அடுத்து வரும் எண்ணை எழுதுக.

1) 79, 77, 75, 73 ................

2) 91, 81, 71, 61, ................

3) 14, 2, 14, 2, ................

4) 38, 33, 28, 23, ..............

5) 2, 4, 8, 16 ..............

6) 176, 88, 44, 22, ..............

6) பின்வரும் உருக்களின் அரைவாசிக்கு நிறந்தீட்டுங்கள்.

1) 2) 3) 4)



7) வசனம் எழுதி பிரசினம் தீருங்கள்.

1) ஒரு கடையில் 86 மாம்பழங்கள் இருந்தன. அதில் 12 மாம்பழங்கள் விற்கப்பட்டால், எஞ்சியிருக்கும் மாம்பழங்கள் எத்தனை? ................................................

2) ஒரு வகுப்பில் 46 ஆண் மாணவர்களும், 23 பெண் மாணவர்களும் உள்ளனர். வகுப்பில் உள்ள மொத்த மாணவர்கள் எத்தனை பேர்? ................................................

3) கடிகாரமொன்றில் சிறிய முள் 6 ஐயும், பெரிய முள் 12 ஐயும் காட்டும் போது, கடிகாரம் காட்டும் நேரம் என்ன? ................................................

4) கடிகாரமொன்றின் பெரிய முள்ளும், சிறிய முள்ளும் 12ஐக் காட்டும்போது, கடிகாரம் காட்டும் நேரம் என்ன? ................................................

5) மணித்தியாலமுள் ஒரு தடவை சுற்றிவர எடுக்கும் நேரம் எவ்வளவு? ................................

6) என்னிடம் இருந்து ரூபா 584 இல் ரூபா 324 க்கு பொருட்கள் வாங்கினேன். என்னிடம் தற்போது இருக்கும் மீதிப்பணம் எவ்வளவு? ................................................

7) குமார் ரூபா 8 பெறுமதியுடைய பென்சிலையும், ரூபா 7 பெறுமதியுடைய பேனாவையும் வாங்கினான். அவன் அவற்றிக்கு பணத்தைச் செலுத்தும் 2 விதங்கள் தருக.

1. .................................... 2. ....................................

8) ஒரு பூவில் 5 இதழ்கள் உண்டு. இவ்வாறான 8 பூக்களிலுள்ள இதழ்களின் எண்ணிக்கை யாது?

9) தரப்பட்டுள்ள எண் கோலத்தை விளங்கி, அடுத்து வரும் எண்ணை எழுதுங்கள்.

1) 1, 2, 4, 8, ..........................

2) 96, 91, 86, 81, ..........................

3) 12, 6, 12, 6, ..........................

4) 21, 23, 25, 27, ..........................



# தரம் - 3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை

# கல்வி முரசு




முன்னணி ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

1) மிகவும் சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) சதுரமுகி ஒன்றைக் கொண்ட கேத்திரகணித தளவடிவம் எது?

1) 2) 3)



2) இரு பரிமாணங்களை மட்டும் கொண்ட கேத்திரகணித தளவடிவம் எது?

1) உருளை 2) கனவுரு 3) செவ்வகம்

3) முக்கோண அரியமொன்றிலுள்ள உச்சிகளின் எண்ணிக்கை எத்தனை?


1) 6 2) 8 3) 9

4) 19 அப்பிள் பழங்களை இருவரிடையே சமமாகப்பங்கிட்டால், ஒருவருக்கு கிடைக்கும் அளவு யாது?

1) 9 உம், 1 மீதியும் 2) 9 உம், பாதியும் 3) 9 மட்டும்

5) அரைவாசிக்கு நிழற்றப்பட்டுள்ள உரு எது?

1) 2) 3)



6) 10x5 க்குச் சமமான தொகையைக் குறிக்கும் விடை எது?

1) 8x5 2) 20 + 30 3) 100 ÷ 4

7) ரூபா 10 காசுத்தாளின் பிரதான நிறம் என்ன?

1) ஊதா 2) பச்சை 3) கபிலம்

8) புதிய ரூபா 50 காசுத்தாளின் முன்புறம் காணப்படும் உரு எது?

1) மன்னம்பிட்டிப்பாலம் 2) கொக்கு 3) ரம்போட கால்வாய்

9) அபிராமி கடைக்குச் சென்று ரூபா 6.00 பெறுமதியுடைய பென்சிலையும், ரூபா 5 பெறுமதி உடைய அழிறப்பரையும் வாங்கிய பின், ரூபா 20.00 காசுத்தாளைக் கொடுத்தால், மீதிப்பணம் கிடைக்கும் விதம் எது?

1) ரூபா 5, ரூபா 2, ரூபா 1, ரூபா 1

2) ரூபா 2, ரூபா 2, ரூபா 2, ரூபா 2

3) ரூபா 5, ரூபா 2, ரூபா 2, ரூபா 2

10) பொது வித்தியாசம் 5 ஐக் கொண்ட எண்கோலம் எது?
1) 41, 39, 35 ..... 2) 17, 22, 27 ...... 3) 33, 36, 39 ........

11) பொது வித்தியாசம் 2 ஐக் கொண்ட எண்கோலம் எது?
1) 56, 57, 60...... 2) 54, 52, 50 ........ 3) 32, 31, 30 .........

12) 97 என்ற எண்ணில் 7 இனால் குறிக்கப்படும் எண் பெறுமானம் எது?
1) 7 2) 70 3) 10

13) 63 என்ற எண்ணில் பத்தினிடத்துப் பெறுமானம் யாது?
1) 3 2) 6 3) 60


14) 63 39 41

வட்டத்தினுள்ளே காணப்படும் எண்களை வரிசைப்படுத்தும் போது நடுவில் வரும் எண் எது?
1) 41 2) 63 3) 39

15) 32 பேர் உள்ள பேருந்து ஒன்றினுள், பேருந்து தரிப்பிடத்திலிருந்து 12 பேர் ஏறினால், பேருந்தினுள் பயணம் செய்யும் மொத்தப் பிரயாணிகள் எத்தனை பேர்?
1) 22 2) 44 3) 54

16) உங்கள் பாடசாலை ஆரம்பிக்கும் நேரம் எது?
1) மு.ப 7.30 2) மு.ப 7.40 3) பி.ப 7.30

17) அருகிலுள்ள கடிகார முகத்திலுள்ள நிமிடமுள் இரு தடவைகள் கடிகாரத்தைச் சுற்றி வந்தால், கடிகார முகம் காட்டும் நேரம் எது?
1) 2.10 2) 3.10 3) 4.10



18) நீளத்தை அளவிடும் சர்வதேச அலகின் குறியீடு
1) M 2) m 3) மீற்றர்

19) எமது முன்னோர் நீளத்தை அளவிடப் பயன்படுத்திய அலகு எது?
1) மீற்றர் 2) சென்ரிமீற்றர் 3) முழம்

20) உங்கள் உயரத்தை மீற்றர் கோலினால் அளந்தால், உயரம் எவ்வளவு?
1) ஒரு மீற்றரை விடக் குறைவு 2) மூன்று மீற்றரை விடக் குறைவு
3) இரண்டு மீற்றரை விடக் குறைவு

**1) பின்வருவனவற்றை கூட்டுங்கள்**

43 + 23 = ____  74 + 25 = ____  32 + 62 = ____  81 + 17 = ____  56 + 41 = ____



1) 17 + 30 = ____  2) 64 + 21 = ____  3) 81 + 18 = ____  4) 77 + 21 = ____  5) 71 + 17 = ____

**2) பின்வருவனவற்றை கழியுங்கள்**


1) 68 - 13 = ____  2) 99 - 45 = ____  3) 82 - 22 = ____  4) 67 - 20 = ____  5) 88 - 24 = ____

1) 89 - 12 = ____  2) 96 - 11 = ____  3) 88 - 42 = ____  4) 69 - 22 = ____  5) 54 - 13 = ____

**3) பொருத்தமானதை இணையுங்கள்.**

| | |
|---|---|
| 1) 18 + 31 | 1) 26 + 26 |
| 2) 30 + 22 | 2) 80 - 10 |
| 3) 62 + 27 | 3) 10 + 39 |
| 4) 86 - 12 | 4) 50 + 24 |
| 5) 50 + 20 | 5) 40 + 49 |


**4) கடிகார முகங்கள் காட்டும் நேரத்தை எழுதுங்கள்**



1)................ 2)................ 3)................ 4)................

**5) தரப்பட்ட நேரத்தை கடிகார முகங்களில் வரைந்து காட்டுக.**

1) 12.30 2) 4.15 3) 6.30 4) 9.15



# லோக்சபா தேர்தல் விரைவில் வரும் சமாஜவாதி தலைவர் நம்பிக்கை


(லக்னோ)

விரைவில், லோக்சபா தேர்தல் நடப்பதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே, கட்சி தொண்டர்கள், தேர்தலுக்கு தயாராக வேண்டும் என காங்கிரஸ் தலைமையிலான ஐ.மு.கூட்டணி அரசுக்கு, வெளியில் இருந்து ஆதரவு அளிக்கும் சமாஜ்வாதி தலைவர், முலாயம் சிங் யாதவ் கூறினார். மத்தியில், காங்கிரஸ் தலைமையிலான, ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சி நடக்கிறது. இந்த அரசுக்கு, சமாஜ்வாதி கட்சி வெளியில் இருந்து ஆதரவு அளிக்கிறது. சில்லரை வர்த்தகத்தில்



அன்னிய முதலீட்டை அனுமதித்தது, பெட்ரோல் விலையை உயர்த்தியது போன்ற விஷயங்களில் நாடாளுமன்றில் காங்கிரஸ் தலைமையிலான அரசுக்கு, ஆபத்து ஏற்படும் போதெல்லாம், அரசியல் அந்தர் பல்டிகளை அடித்து, அரசை காப்பாற்றி வருகிறார் சமாஜ்வாதி கட்சி தலைவர் முலாயம் சிங் யாதவ். இந்நிலையில், நேற்று அவர் கூறியதாவது இம்மாத இறுதியில், நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் தொடங்குகிறது. இந்த கூட்டத் தொடர் முடிந்தபின், பொதுத் தேர்தல் நடப்பதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது. குறிப்பாக, வரும் செப்ரெம்பரில், லோக்சபா தேர்தல் நடக் கலாம். அதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

எனவே, நம்கட்சி தொண்டர்கள் தேர்தலுக்கு, முழு வீச்சில் தயாராக வேண்டும். மக்களுடன் தொடர்பில் இருக்க வேண்டும். அவர்களின் பிரச்சினைகளை அதிகாரிகளுக்கு பரிந்துரைத்து தீர்வுகாண வேண்டும் என்றும் அவர் கூறினார்.




# மம்தா எழுதிய புத்தகங்கள் கண்காட்சி



(கொல்கத்தா)

மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி எழுதிய கதை, கவிதை, ஓவிய நூல்கள், கொல்கத்தா புத்தக கண்காட்சியில் வெளியாகி உள்ளன. முதல்வரான பிறகு சந்தித்த பிரச்சினைகள், பிறப்பித்த சட்டங்கள் போன்றவற்றையும் நூல்களாக வடித்துள்ளார் தன் எண்ணங்களை ஓவியங்களாக தீட்டியுள்ளார். நாட்டின் பெண் அரசியல் தலைவர்களில், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி சற்று வித்தியாசமானவர். அரசியல் மற்றும் நிர்வாகத்துடன் ஓவியம், கவிதை, எழுத்து என பல துறைகளிலும் சிறப்பாக செயலாற்றி வருபவர். அவர் வரைந்த ஓவியங்கள், கொல்கத்தாவில் சமீபத்தில் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன. அவற்றை நல்ல விலைக்கு பலர் வாங்கிச் சென்றனர். நீண்ட காலமாக பொது வாழ்க்கையில் இருக்கும் மம்தா, இதுவரை 35 புத்தகங்கள் எழுதியுள்ளார். கடந்த 2011இல் அவர் முதல்வரான பிறகு, சந்தித்த பிரச்சினைகள், சந்தித்த மக்கள், பிறப்பித்த உத்தரவுகளைக் கவிதையாக வடித்துள்ளார். அந்த கவிதைகளில் மனிதர்களின் துயரம், மனித உரிமை மீறல்கள், அரசியல் போராட்டங்கள் போன்றவற்றை குறிப்பிட்டுள்ளார். அவற்றுடன், அவருக்கு பிடித்த சிறுகதைகளைத் தொகுத்து நூலாக தயாரித்துள்ளார். மேலும், அவரே சில கதைகளை எழுதி, புத்தகமாக உருவாக்கியுள்ளார்.

இவற்றுடன் அவரின் கட்டுரைகள், ஓவியங்கள் என ஐந்து புத்தகங்களை அவர் உருவாக்கியுள்ளார். அவை, கொல்கத்தா புத்தகக் கண்காட்சியில் வெளியாக உள்ளன. இதன் மூலம், அவரின் புத்தகங்கள் எண்ணிக்கை 40 ஆக அதிகரித்துள்ளன.

மேலும், அவரின் கவிதைகளை பிரபல பாடகி சுடாபா பானர்ஜி பாடி, தயாரிக்கப்பட்டுள்ள "சிடி"யும் வெளியாக உள்ளது. புத்தக கண்காட்சியில வெளியாக உள்ள புத்தகங்களை பிரபலப்படுத்த, "பேஸ்புக்" இணையதளத்தில் அந்த புத்தகங்களின் மேல் அட்டையை விளம்பரப்படுத்தியுள்ளார்.

## இந்தியச் செய்திகள்

# தி.மு.க.பொதுச் செயலர் மருத்துவமனையில் அனுமதி

தி.மு.க.பொதுச் செயலர் அன்பழகன் உடல் நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். தி.மு.க.பொதுச் செயலர் அன்பழகன் சிறுநீரகக் கோளாறு காரணமாக ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தகவல் அறிந்த தி.மு.க.முன்னாள் அமைச்சர் ஆற்காடு வீராசாமி, மருத்துவமனைக்கு வந்து அன்பழகனின் உடல் நிலை குறித்து குடும்பத்தினரிடம் கேட்டறிந்தார்.



# ஷில்பா ஆடிய நடனத்துக்கு விலை 71.73 இலட்சம்



(புதுடில்லி)

புனேவில் நடந்த இளைஞர்களுக்கான கொமன்வெல்த் போட்டி நிறைவு நிகழ்ச்சியில், சுரேஷ் கல்மாடியின் வற்புறுத்தலின் பேரில் பாலிவுட் நடிகை ஷில்பா ஷெட்டியின் நடனம் சேர்க்கப்பட்டு, அதற்காக ரூ. 71.73 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டு டில்லியில் கொமன்வெல்த் போட்டி நடத்தப்பட்டதில் ரூ.90 கோடி அளவிற்கு முறைகேடுகள் நடந்துள்ளதாக, அப்போதைய போட்டி ஒருங்கிணைப்பாளர் சுரேஷ்கல்மாடி உள்ளிட்ட 11 பேர் மீது புகார் தெரிவிக்கப் பட்டது.

இது தொடர்பாக சி.பி.ஐ. நடத்திய விசாரணையில் இழப்பு உறுதி செய்யப்பட்டு, சுரேஷ் கல்மாடி கைது செய்யப்பட்டு தற்போது ஜாமினில் உள்ளார். அவர் மீது ஏமாற்றுதல், மோசடி, குற்றச்செயல்களில் ஈடுபடுதல், கிரிமினல் சதி ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், கடந்த 2008 ஆம் ஆண்டு இளைஞர்களுக்கான கொமன்வெல்த் போட்டிகள் புனேவில் நடந்தன.

இப்போட்டியின் நிறைவுநாள் நிகழ்ச்சியில் கடைசி நேரத்தில் பாலிவுட் நடிகை ஷில்பா ஷெட்டியின் நடன நிகழ்ச்சி சேர்க்கப்பட்டது.

ஷில்பா ஷெட்டிக்கு பிரபல தொழிலதிபர் ராஜ் குந்த்ராவுடன் திருமணம் நடக்கவிருந்த நிலையில், கடைசியாக ஷில்பா ஷெட்டியின் நடனத்தை கண்டு களிக்கவே சுரேஷ் கல்மாடி இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்ததாக கூறப்படுகிறது.

இதற்காக விஷ்கிராப் இன்டர் நேஷனல் என்டர்டெய்ன்மெண்ட் நிறுவனத்திற்கு ரூ.71.73 இலட்சம் தொகையை, ஜெம் இன்டர் நேஷனல் நிறுவனத்தைச் சேர்ந்த ஆர்யா மற்றும் மதன் ஆகியோர் கொடுத்துள்ளனர்.

கல்மாடி பார்த்து ரசிப்பதற்காக விளையாட்டுப் போட்டியை காரணம் காட்டி அவர் பெருமளவு பண விரயம் செய்துள்ளதாக சி.பி.ஐ.குற்றம் சாட்டியுள்ளது. குறிக்கப்பட்ட பணியை விட்டு மற்றப் பணிகளுக்கு பணத்தை செலவிட்டதாக, ஆர்யா மற்றும் மதன் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# விஸ்வரூபத்தில் நீக்கப்படும் காட்சிகளின் விபரம்



பல்வேறு சிக்கல்களை நாளை விஸ்வரூபம் திரைக்கு வரவிருக்கிறது. இப்படத்தில் குறிப்பிட்ட 7 காட்சிகளை நீக்க முத்தரப்பு பேச்சுவார்த்தையில் முடிவு எடுக்கப்பட்டது. அந்தக் காட்சிகள் விவரம் வெளியாகியுள்ளன. படத்தின் தொடக்கத்தில், இது இஸ்லாமியர்களுக்கு எதிராகவோ மற்ற சாதி-மதத்தினரின் கோட்பாடுகளுக்கு எதிராகவோ எடுக்கப்பட்ட படம் அல்ல. இது ஒரு கற்பனை கதை என டைட்டில் போடப்படும்.

படத்தில் ஆங்காங்கே காட்சிகளின் போது ஒலிக்கும் திருக்குர்ரான் வசனங்கள் நீக்கப்பட்டு வெறும் காட்சிகள் மட்டும் ஓடும்.

திருக்குர்ரான் வசனம் பின்னணியில் அமெரிக்கரின் தலை துண்டிக்கப்படும் காட்சிகளும், வசனமும் நீக்கப்படும். ஆப்கான் சிறுவர்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு விளையாடுவது போல காட்டப்பட்டுள்ளதும் நீக்கப்படும் என்று கமல்ஹாசன் தரப்பு உறுதியளித்துள்ளது. இது தவிர சில இடங்களை வசனங்களை நீக்கவும் கமல்ஹாசன் ஒப்புக் கொண்டுள்ளார் என்பது கூடுதல் தகவல்.

அமெரிக்காவில் குண்டு வெடிப்பை தடுப்பதற்காக கமல்ஹாசன் பிரார்த்தனை செய்யும் காட்சிகளும், பின்னணியில் தெரியும் தொழுகை நடத்தும் காட்சிகளும் நீக்கப்படும்.

முல்லா ஓமர் கோவையிலும், மதுரையிலும் தலைமறைவாக இருந்தார் என்பதை சித்தரிக்கும் காட்சிகள் நீக்கப்படும்.

நடிகர் நாசர் ஒரு காட்சியில் முஸ்லிம் அல்லாதவர்களை அப்புறப்படுத்துவதே முஸ்லிம்களின் கடமை என்று வசனம் பேசுவார். அந்த காட்சிகள் நீக்கப்படும். இந்தக் காட்சிகள் எல்லாம் நீக்கப்பட்டு நாளை 7 ஆம் திகதி படம் தமிழகத்தில் திரைக்கு வர இருக்கிறது.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# தென்கொரியாவும் அமெரிக்காவும்

# அணு ஆயுத போர்ப் பயிற்சி

## அதிர்ச்சியில் வடகொரியா



தென் கொரியாவும், அமெரிக்காவும் இணைந்து அணு ஆயுதம் ஏந்தும் நீர் மூழ்கிக் கப்பல் பயிற்சிகளை மேற்கொண்டன.

ஜப்பானின் கிழக்குக் கடலில் மூன்று நாட்களுக்கு நடைபெறும் இந்த கடற்பயிற்சியில் நீர் மூழ்கியை கண்டறிவது, அணு ஆயுதங்களை எதிர்கொள்வது உள்ளிட்ட போர்ப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

வட கொரியா கடந்த டிசம்பர் மாதம் தொலைதூர ராக்கெட் ஒன்றை ஏவியதனால் அமெரிக்கா சில தடைகளை விதித்தது.

இதைத் தொடர்ந்து வட கொரியா தினம்தினம் மிரட்டல் விடுத்து வந்த இந்த சூழலில் தென்கொரியாவுடன் இணைந்து அமெரிக்கா போர்ப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளது, உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளதுடன் வடகொரியாவையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இப்பயிற்சியின் எதிரொலியாக வட கொரியாவும் விரைவில் தனது மூன்றாவது அணு ஆயுத சோதனையை தொடங்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

# ஓசாமா கொல்லப்பட்ட இடத்தில் கேளிக்கைப் பூங்கா



அமெரிக்காவிற்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய தலிபான் தீவிரவாதி ஓசாமா பின்லேடன், அமெரிக்க சிறப்புப் படையால் கடந்த 2011ஆம் ஆண்டு சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவர், தனது இறுதி நாட்களில் வாழ்ந்த பாகிஸ்தானின் வட மேற்கு எல்லைப்பகுதியான அபோத்தாபாத்தில், 30 மில்லியன் டொலர்கள் செலவில் கேளிக்கைப் பூங்கா ஒன்றை அமைக்க பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது.

இமாலய மலை அடிவாரத்தில் அமைக்கப்பட உள்ள இந்த பூங்காவில் விலங்கியல்ப் பூங்கா, நீர்விளையாட்டுக்கள், மினி கோல்ஃப் மைதானம், பாறை ஏறுதல் உள்ளிட்ட அம்சங்கள் இடம் பெற உள்ளன.

இந்த கேளிக்கைப் பூங்கா அடுத்த 5 ஆண்டுகளுக்குள் முடிவடையும் என்று பூங்காவின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

# பூமியை நெருங்கும் இராட்சத விண்கல்



அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள் கடந்த 1990ஆம் ஆண்டில் இருந்து விண்வெளியை ராடர்களின் மூலம் கண்காணித்து வருகின்றனர். இந்த நிலையில் ஒரு இராட்சத விண்கல் பூமியை நோக்கி பறந்து வருவது தெரிந்தது. சுமார் 50 மீற்றர் அகலம் கொண்ட அந்த இராட்சத விண்கல்லுக்கு 2012 டிI4 என பெயரிட்டுள்ளனர் அக்கல் தற்போது பூமியில் இருந்து 27,680 கி.மீற்றர் தூரத்தில் உள்ளது. இந்தத் தூரம் பூமிக்கும் இராட்சத விண்கல்லுக்கும் இடையே மிக குறைவானது என கணிக் கப்பட்டுள்ளது.

இந்த விண்கல் நிச்சயம் பூமியைத் தாக்காது. எதிர்வரும் 15ஆம் திகதி அது பூமியை கடந்து செல்கிறது. இந்த தகவலை நாசா விஞ்ஞானி டான் யியோ மான்ஸ் தெரிவித்துள்ளார். இது போன்ற ஒரு இராட்சத விண்கல் கடந்த 1908ஆம் ஆண்டு பூமியை தாக்கியது. அப்போது அது ரஷியாவின் சைபீரியாவில் வனப் பகுதியில் விழுந்தது. இதனால் பல நூறு சதுர கி.மீற்றர் தூரத்துக்கு பெரிய பள்ளங்கள் ஏற்பட்டன.

# ஈரான் அனுப்பும் விண்கலத்தில் விண்வெளிக்குச் செல்லத் தயார்

## – அதிபர் அகமதி நிஜாத்



ஈரான் சார்பில், விண்வெளிக்கு அனுப்பப்படும் விண்கலத்தில் முதல் ஆளாக செல்லத்தயாராக இருக்கிறேன், என, ஈரான் அதிபர், அகமதி நிஜாத் தெரிவித்துள்ளார். அணு ஆயுதம் தயாரிப்பதாக, உலக நாடுகள் சந்தேகிப்பதால், ஈரான் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இரண்டு வாரங்களுக்கு முன், தங்கள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ரொக்கெட் மூலம், குரங்கை, விண்வெளிக்கு அனுப்பியது ஈரான். விண்வெளிக்கு அனுப்பப்பட்ட குரங்கு, உயிருடன் திரும்பியதன் மூலம், தங்களது விண்வெளித்திட்டம் வெற்றி பெற்று விட்டதாக ஈரான் கூறி வருகிறது.

ஆனால், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள், ஈரானின் விண்வெளித்திட்டம் கவலைக்குரியது என, தெரிவிக்கின்றன. ரொக்கெட் சோதனை என்ற போர்வையில் ஈரான், ஏவுகணை தயாரிக்கலாம் என, அந்நாடுகள் சந்தேகிக்கின்றன. இதற்கிடையே. ஈரான் அதிபர் அகமதி நிஜாத் குறிப்பிடுகையில், நம்நாட்டை சேர்ந்த ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகளின் உழைப்பினால், விண்வெளித் திட்டத்தில் வெற்றி கண்டு வருகிறோம். விண்வெளிக்கு குரங்கு அனுப்பப்பட்டதை, மேற்கத்திய நாடுகள் நம்ப மறுக்கின்றன. ஈரான் விண்கலம் மூலம், விண் வெளிக்கு மனிதர்கள் அனுப்பப்பட்டால், முதல் ஆளாக நான் செல்ல தயாராக இருக்கிறேன், என்றார்.

உலகச் செய்திகள்

# சீன அரசியலில் இறங்கிய அதிரடி மன்னன் ஜாக்கிசான்

சீன அரசின் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து நடிகர் ஜாக்கிசான் அரசியலில் குதித்துள்ளார்.

சீன கம்யூனிஸ்டு கட்சியின் புதிய பொதுச் செயலாளராக நியமணம் செய்யப்பட்டுள்ள ஸிஜின்பிங், வருகிற மார்ச் மாதம் புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்கவுள்ளார்.

இதைத் தொடர்ந்து சீனாவில் மக்கள் பிரச்சினைகளை தீர்க்கும் அரசியல்க் குழுவின் உறுப்பினர்களை நியமித்து வருகிறார்.

இக்குழுவின் ஆலோசகர்களில் ஒருவராக அதிரடி மன்னன் நடிகர் ஜாக்கிசான் நியமிக்கப்பட்டுள்ளார்.


சமீபத்தில் அமெரிக்க பத்திரிகைகளில் சீன தலைவர்கள் ஊழல்வாதிகள் என கட்டுரை வெளியாகியிருந்ததை எதிர்த்து ஜாக்கிசான் கடுமையாக பேசினார்.

உலகிலேயே ஊழல் மலிந்த நாடு அமெரிக்கா தான் என கருத்துத் தெரிவித்து, சீனத் தலைவர்களை புகழ்ந்திருந்தார்.

இதைத்தொடர்ந்து இவருக்கு இப்பதவி வழங்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இவர் தவிர கடந்த ஆண்டு சிறந்த இலக்கியத்துக்காக நோபல்ப்பரிசு பெற்ற சீன எழுத்தாளர் மோயான் மற்றும் புகழ் பெற்ற முன்னாள் கூடைப்பந்து வீரர் ஒருவரும் இப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

# பாரிஸ் பெண்கள் கால்சட்டை அணிய 200 ஆண்டுகளின் பின்னர் அனுமதி



பாரிஸ் நகரப் பெண்கள் கால்சட்டை அணி வதற்கு தடை விதிக்கும் சட்டம் 200 ஆண்டு களுக்கு பின் தற்போது விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 1800ஆம் ஆண்டு பாரிஸ் நகரப் பெண் கள், ஆண்கள் அணியும் கால்சட்டை அணி வதற்கு தடைவிதிக்கப்பட்டது.

ஆனால் பெண்கள் கால்சட்டை அணிய விரும்பினால் நகர பொலிசாரிடம் அனுமதி வாங்க வேண்டும் என்று அந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கடந்த 1892ஆம் மற்றும் 1909ஆம் ஆண்டுகளில் இந்த சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டபோதும் அதிகாரபூர்வமாக நடைமுறைக்கு வரவில்லை.

பாரிஸ் நகரப் பெண்கள், இந்தச் சட்டத்துக்கு, கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தநிலையில் 200 ஆண்டுகளுக்கு பின் ஒருவழியாக இந்தச்சட்டம் நீக்கப்பட்டுள்ளது. இந்த தகவலை பிரான்சின் பெண்கள் உரிமைத்துறை அமைச்சர் நஜாத் வல்லாட் பெல்காசெம் தெரிவித்துள்ளார்.

# வல்லுறவு புரிந்தபின் மகள் கொலை; மதபோதகரை விடுதலை செய்தது சவுதி



மகளை வல்லுறவுக்கு உட்படுத்திக் கொலை செய்த மதபோதகருக்கு குறைவான தண்டனை கொடுக்கப்பட்டதற்கு சவுதி அரேபியப் பெண்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

கடந்த 2011ஆம் ஆண்டில் தலை மற்றும் கையில் காயங்கள் மற்றும் தீக்காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சிறுமி இறந்தாள்.

இது குறித்த விசாரணையில் தன் மகளை சித்திரவதை செய்து கொலை செய்ததாக தந்தை பாய்ஹான்-அல்-காம்தி என்பவர் ஒப்புக்கொண்டார்.

இந்த வழக்கில் சிறுமியின் தாயான, தன் மனைவிக்கு அவர் இரத்த இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் இதுவரை அவர் சிறையிலிருந்த காலமே போதுமானது என சவுதி நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இஸ்லாமிய சட்டங்களின் படி, தன் சொந்தக்குழந்தைகளை கொலை செய்த தந்தை மற்றும் மனைவியை கொலை செய்த கணவனுக்கு தண்டனை ஏதும் விதிக்கப்படாது.

அதற்கு பதிலாக கொலையாளி, கொல்லப்பட்டவரின் நெருங்கிய உறவினருக்கு இழப்பீட்டு தொகையாக பணம் வழங்க வேண்டும்.

இது 'இரத்த இழப்பீடு' என்று அழைக்கப்படுகிறது. நீதிமன்றத்தின் இந்த தீர்ப்புக்கு சவுதி மகளிர் அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

# மாத்தளை மனிதப்புதைகுழி வெளிக்கிளம்பும் படுகொலை இரகசியம்

மாத்தளை படுகொலைகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தற்போதைய அரசாங்கமே பொறுப்புக் கூறவேண்டும் என ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புகளில் உள்ள கைகள் இயற்கையாக உடைந்திருக்கவில்லை எனவும் அந்த எலும்புகளில் ஆணிகள், இரும்பு கம்பிகள் இருந்துள்ளமைக்கான சாட்சியங்கள் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார். மிகவும் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டு, புதைக்கப்பட்ட மாத்தளை மனிதப் புதைகுழி தொடர்பில் தற்போது பெரும் சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன. 1988 ஆம் 89 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தினால் 'உத்தியோகபூர்வமான மற்றும் உத்தியோகபூர்வமற்ற கொலைக்குழுக்கள் இயங்கிவந்தன. பொலிஸ் மற்றும் இராணுவத்தினரை பயன்படுத்தி கொலைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அதிகாரபூர்வமற்ற கொலைக்குழுக்களும் கொலைகளில் ஈடுபட்டன. அன்றைய அமைச்சர்களின் வீடுகள் கொலைக் களங்களாகவும், வதை முகாம்களாகவும் இருந்தன. புத்தளம், காலி, மாத்தறை போன்று கம்பஹா மாவட்டத்திலும் அமைச்சர்களின் வீடுகளில் கொலைக்களங்கள் இருந்தன.

அன்றைய அரசாங்கத்தின் அரசியல்வாதிகள் இந்த கொலைகளுடன் நேரடியாக சம்பந்தப்பட்டிருந்தனர். பட்டலாந்த விசாரணை ஆணைக்குழுவின் மூலம் இப்படியான படுகொலைகள் நடந்துள்ளதாக நாட்டுக்கு தெரியவந்தது. வீதிகளில் எரியூட்டப்பட்டனர். ஆறுகளில் பிணங்களை மிதக்க விட்டனர். பேராதனை கலஹா சந்தியில் கொலை செய்யப்பட்டவர்களின் தலைகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு கொலை செய்யப்பட்டவர்கள் பல இடங்களில் புதைக்கப்பட்டனர். இதன் பின்னர் பல மனித புதைக்குழிகள் கண்டுப்பிடிக்கப்பட்டன. 1994 ஆம் ஆண்டு எம்பிலிப்பிட்டிய சூரியகந்த புதைக்குழி பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியது. விசாரணைகள் நடத்தப்பட்ட சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டது. அதேபோல் குருணாகல் கொஸகெல, மாத்தறை எலியகந்த பிரதேசங்களில் இவ்வாறான புதைக்குழிகள் இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. மாத்தளையில் 140 எலும்புக்கூடுகள் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன. புதைக்குழியை தோண்டும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் சுமார் 200 சடலங்களின் எலும்புக் கூடுகள் இருக்கலாம் எனக் கூறியுள்ளனர். இதனடிப்படையில் இலங்கை வரலாற்றில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய மனித புதைக்குழியாக மாத்தளை புதைக்குழி காணப்படுகிறது. அத்துடன் அந்த எலும்புக்கூடுகள் 88 ஆம் 89 ஆம ஆண்டுகளுக்குரியது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எலும்புக்கூடுகளாக மீட்கப்பட்டவை தொற்று நோயினால் உயிரிழந்தவர்களின் எலும்புக் கூடுகள் அல்ல. தொற்று நோயினால் கொல்லப்பட்டவர்களாக இருந்தால் உயிரிழந்தவர்களின் தகவல்கள் வைத்தியசாலையின ஆவணங்களில் இருக்க வேண்டும். அறிக்கைகளை தயாரிக்காமல் இவ்வாறு பெரும் எண்ணிகையிலானவர்களை புதைக்க முடியாது. இதனால் இந்த எலும புக் கூடுகள் அன்றைய அரசாங்கத்தினால் கொலை செய்யப்பட்ட இளைஞர்களின் எலும்புக் கூடுகள் என்பது உறுதியாகியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

# உணவகங்களின் தரம்; மீளாய்வு செய்யக்கோரிக்கை

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணத்தில் உள்ள பல உணவகங்களுக்கு வழங்கப்பட்ட தரச் சான்றிதழ்கள் மீளாய்வுக்கு உட்படுத்தப்படல் வேண்டும் என பொதுமக்கள் பலரினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் உணவகங்கள், சுகாதாரப் பகுதியினரின் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டு ஏ,பி,சி என தரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. இவற்றில் ஏ தரம் பெற்றவை முதல்தரமாகவும், பி தரம் பெற்றவை இரண்டாவதாகவும், சி தரம் பெற்றுக்கொண்டவை கடைசி எனவும் உணவகங்கள் தரம் பிரிக்கப்பட்டன.

ஆனால், முதல் தரம் என ஏ சான்றிதழ் வழங்கப்பட்ட பல உணவகங்கள் அவற்றுக்கான தகுதியுடன் இல்லை எனவும் இவ்வுணவகங்களுக்கு இச் சான்றிதழ் கிடைக்கப்பெற்றமை பொதுமக்களுக்குப் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சீர்கேடுகளுடனும் பல குறைபாடுகளுடனும் காணபபடும் பல உணவகங்களுக்கு ஏ சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. அழுக்கடைந்த உடைகளுடன் பணிபுரியும் வேலையாட்கள், கழிவு நீர் தேங்கிநிற்கும் இடங்கள், இடவசதியில்லாத உணவருந்தும் இடம், துப்புரவற்ற சமையற்பகுதி என பல குறைபாடுகளுடன் காணப்படும் உணவகங்களும் ஏ தர சான்றிதழ் பெற்றுக்கொண்டு அவற்றைப் பெருமையுடன் முன்பக்கத்தில் காட்சிப்படுத்தியுள்ளமையைக் காணமுடிகின்றது எனப் பலராலும் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதார சீரழிவுடன் காணப்படும் இவ்வுணவகங்களுக்கு ஏ தர சான்றிதழ்கள் வழங்கப்பட்டமை குறித்துக் கவனம் செலுத்தப்படுவதுடன் இவற்றுக்கரன மீளாய்வும் அவசியம் தேவைப்படுவதாகப் பொதுமக்கள் பலர் தெரிவித்துள்ளார்கள். (137)

## ஜனாதிபதி...

திகதி விசேட க்லந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாகவும் அதன்போது சில முடிவுகள் எடுக்கப்படும். அதன்படி எதிர்வரும் 12 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் ஜனாதிபதி, 13 ஆம் திகதி வரை யாழில் தங்கியிருந்து பல நிகழ்வுகளில் கலந்துகொள்வார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த தைப்பொங்கல் தினமான ஜனவரி 14 ஆம் திகதி யாழிற்கு ஜனாதிபதி விஜயம் மேற்கொள்வார் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் சீரற்ற காலநிலை காரணமாக பின்னர் அவரது விஜயம் இரத்துச் செய்யப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## படகு...

யாளர்கள் தொடர்பில் கடுமையான சட்டங்கள் அமுல்படுத்தப்படும் எனத் தெரிவித்துள்ளது. அவுஸரேலிய கடல் எல்லைக்குள் புகலிடக் கோரிக்கையாளர் படகுகள் பிரவேசிப்பதனை தடுக்க இராணுவத்தினரை பயன்படுத்தப் போவதாகக் குறிப்பிட்டுள்ளது. பலவந்தமான முறையில் இவ்வாறு புகலிடக்கோரிக்கையாளர்கள் திருப்பி அனுப்பிவைக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்கு இலங்கைக் கடற்படையினரின் ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ளப்படும் என அறிவித்துள்ளது. எனினும், தனிப்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்களின் தேவைகளை அறிந்து கொள்ளாது நேரடியாக படகுகளை திருப்பி அனுப்பி வைப்பது சர்வதேச சட்ட மீறலாகும் என ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய நடைமுறையானது பாரியளவில் சர்ச்சைகளை ஏற்படுத்தும் எனக் குறிப்பிட்டுள்ளார். தற்போதைய அவுஸ்ரேலிய புகலிடச் சட்டங்களின் அடிப்படையில் இவ்வாறு புகலிடக் கோரிக்கையாளர்களை உடனடியாகத் திருப்பி அனுப்பிவைக்க முடியாது எனத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டால் மட்டுமே இவ்வாறு புகலிடக்கோரிக்கையாளர்களை திருப்பி அனுப்பி வைக்க முடியும் என அவுஸ்ரேலிய மெக்யூரி பல்கலைக்கழக சட்டத்துறை பேராசிரியர் நெடலி கெலீன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புகலிடக் கோரிக்கையாளர்களை நேரடியாக திருப்பி அனுப்பி வைக்க அவுஸ்ரேலிய சட்டத்தில் இடமில்லை என கிறீன் கட்சியின் குடிவுரவு பேச்சாளர் சாரா ஹான்சென் தெரிவித்துள்ளார். செப்ரெம்பர் மாதத் தேர்தலில் எதிர்க்கட்சி வெற்றியீட்டினால் இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை திருப்பி அனுப்பிவைப்பது குறித்து கடுமையான சட்டங்கள் அமுல்படுத்தப்படும் என நிழல் குடிவரவுப் பேச்சாளர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

# சர்வதேச சட்ட விதிகளுக்கு ஏற்ப பல்கலைக்கழக மாணவர்கள் நடாத்தப்பட வேண்டும்

## கோருகிறது மன்னிப்புச் சபை

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சர்வதேச சட்ட விதிகளுக்கு அமைவாக நடாத்தப்பட வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை விடுத்துள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களை விடுதலை செய்யுமாறு சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை விடுத்துள்ளது. யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டுளளனர்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நான்கு மாணவர்களை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கைது செய்திருந்தனர். இவர்களில் இருவர் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டுள்ளனர். உள்ளூர் அரசியல்வாதியின் அலுவலகம் மீதான பெற்றோல் குண்டுத் தாக்குதல் மற்றும் ஆர்ப பாட்டப் பேரணி ஒழுங்கு செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பீ.தர்ஷானாள்த் மற்றும் ஜெனம்ஜெய்மேனன் ஆகிய மாணவர்களை விடுதலை செய்யுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது. குறித்த மாணவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் அல்லது அவர்களுக்கு எதிராக உரிய முறையில் வழக்குத் தொடரப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளது. சந்தேக நபர்கள் சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக நடத்தப்படுதனை அதிகாரிகள் உறுதி செய்ய் வேண்டும் எனவும், சட்டத்தரணிகளின் உதவிகளை பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் எனவும் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

## இலங்கைத்...

கருணாநிதி குற்றம் சுமத்தியுள்ளார். இது தொடர்பில் பிரமர் மன்மோகன் சிங்கிற்கும், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்திக்கும் கருணாநிதி கடிதம் அனுப்பி வைத்திருந்தார். இந்தக் கடிதம் தொடர்பில் சோனியா காந்தி பதில் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். அக்கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## சர்வதேச...

புலம்பெயர் புலிகளின் உதவியுடன் செயற்படுவதாகவும் அதனை உறுதிப்படுத்தத் தயாராக இருப்பதாகவும் அரசாங்கம் கூறியுள்ளது. அதேவேளை 8 நாடுகள் விடுதலைப் புலிகளுக்கு வேறு வழிகளில் ஆயுதங்களை வழங்கியிருந்தமை குறித்த தகவல்களையும் அரசாங்கம் கண்டறிந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கூட்டுச்சேரும்...

இயக்கத்தில் ஐக்கிய தேசியக்கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி, ஐக்கிய சோஷலிச கட்சி, நவசம சமாஜகட்சி, நவசிகல உறுமய, முஸ்லிம் - தமிழ் கூட்டணி, ருஹுனு மக்கள் கட்சி, ஐக்கிய ஜனநாயக முன்னணி, மௌபிம ஜனதா பெரமுன ஆகிய கட்சிகளும் சுதந்திரத்திற்கான மேடை அமைப்பும் இடம்பெறுகின்றன.

## பின்தங்கிய...

குறிப்பாக கடந்தகால போர்ச்சூழலில் பாதிக்கப்பட்டும் மற்றும் பின்தங்கியதுமான நிலையில் வடபகுதி பாடசாலைக் கட்டடங்களின் புனரமைப்பு, நிர்மாணம், மற்றும் மூலதனச் செலவீனங்கள் தொடர்பாக அதிமேதகு ஜனாதிபதியின் கவனத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கொண்டுசென்றுள்ளார்.

மேலும் கழிப்பறை வசதிகள் இல்லாத, குடிநீர் வசதியற்ற மற்றும் வேறு அடிப்படைத் தேவைகளை எதிர்நோக்கியுள்ள பாடசாலைகள் தொடர்பில் அமைச்சரவர்கள் இவ்விடயத்தினை பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்திலும் வலியுறுத்தியுள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்கனவே பாடசாலைகளின் அபிவிருத்தி மற்றும் கல்வி மேம்பாடு தொடர்பில் அதிக கவனம் செலுத்தி வருவதுடன் தொடர்ச்சியான பல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருவது தெரிந்த்தே.

## கலைத்துறை...

அவருடைய ஆய்வாளர்நிலை காலப் பகுதியல் இந்தியாவில் வெவ்வேறு இடங்களில் சொற்பொழிவுகள் / கலந்துரையாடல்கள் அளிக்கவேண்டியவராவர். 2011 இல் கவிஞரும் / நூலாசிரியருமான சுமதி சிவமோகனுக்கும் 2012 இல் எழுத்தாளர் யஸ் மனி குணராசாவுக்கும் சாகித்திய நிலையத்தால் மதிப்புமிக்க பிறேமசந் ஆய்வாளர் நிலை (fellowshig) வழங்கப்பட்டது.

மதிப்புமிக்க பிறேமசந் ஆய்வாளர்நிலை 2013 இற்கு இலங்கையில் கலை, இலக்கியத்துறையில் புகழ்வாய்ந்தவர்களிடமிருந்து நியமனங்கள் கோரப்படுகின்றது. (வெளியீட்டாளர்கள், இலங்கையிலுள்ள இலக் கிய அமைப்புக்கள் எழுத்தாளர்கள். துறைசார் அறிஞர்கள் பெயரை அவர்களுடைய சுய விபரங்களுடன் நியமனங்களை அனுப்பமுடியும்) நியமனங்கள் இந்திய கலாசார நிலையம், 16/2 கிறெகரிஸ் இடம், கொழும்பு 7 என்னும் விலாசத்திற்கு 2013 பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்குமாறு அனுப்பிவைக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு இந்திய கலாசார நிலையத்தின் தொலைபேசி இலக்கம் 268 4698 இதனூடாகவோ மின்னஞ்சல் முகவரி iccrolombo@gmail.com ஊடாகவோ தொடர்பு கொள்ளலாம்.

விண்ணப்பத்தின் பிரதி ஒன்றினை இந்திய துணைத்தூதரகம், 14, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

# திறமையுடன் செயற்படவில்லை எரிக்சொல்ஹெய்ம் மீது குற்றச்சாட்டு

## விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் பிரச்சினைகளின் தீர்வுக்காக காத்திரமான முறையில் செயற்படவில்லை என்பதை இலங்கை அரசு தெளிவாக உணர்ந்துகொண்டிருந்ததாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக நோர்வேயின் விசேட சமாதானத்தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் காத்திரமான யோசனைகளை முன்வைக்கவில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளதாக விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு ராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தை அடிப்படையாகக் கொண்டு, அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுக்கும், இலங்கை சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவிற்கு இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை தொடர்பான குறிப்புக்களே இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.


உறுதியான தீர்மானம் ஒன்றை எடுக்குமாறு இலங்கை அரசாங்கத்தை சொல்ஹெய்ம் வலியுறுத்தியதாக ஜயந்த தனபால தெரிவித்துள்ளார். அதாவது சமாதானப் பேச்சுவார்த்தைகளை தொடர்வதற்கு இடைக்கால நிர்வாகம் குறித்த புலிகளின் யோசனையை ஏற்றுக் கொள்ளுமாறு சொல்ஹெய்ம் அரசாங்கத்தை வலியுறுத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இந்த யோசனைத் திட்டம் தொடர்பில் விடுதலைப் புலிகள் எவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார்கள் என்பது குறித்து சொல்ஹெய்ம் உறுதியாக எதனையும் குறிப்பிடவில்லை என அவர் தெரிவித்துள்ளார். புலிகள் எவ்வாறான நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்பது பற்றிய உறுதிமொழிகள் இன்றி இலங்கை அரசாங்கத்தை தீர்மானம் எடுக்குமாறு சொல்ஹெய்ம் கோரியமை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 2004 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி இந்தக் குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லான்ஸ்டாட்டினால் இந்தக் குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் மீது ஏனைய தரப்பினர் அதிகளவான அழுத்தங்களை பிரயோகித்து வருவதாக தூதுவர் லான்ஸ்டாட் தெரிவித்துள்ளார். புலம்பெயர் தமிழர்களினால் மட்டுமே புலிகளின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க முடியும் எனவும், அமெரிக்க புலம்பெயர் தமிழர்களுடன் நிலைமைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த முயற்சிகுமாறு ஜயந்த தனபால அமெரிக்காவிடம் கோரியுள்ளார்.

யுத்த நிறுத்த உடன்படிக்கைகளுக்கு புலிகள் உரிய முறையில் மதிப்பளிப்பதில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். நாகர் கோயில் பகுதியில் யுத்த நிறுத்த விதிகளை மீறி முன்னரங்கப் பகுதிகளை புலிகள் விஸ்தரித்து வருவதாக ஜயந்த தனபால தெரிவித்துள்ளார் என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.



வன்னியிலிருந்து நெல் ஏற்றிக்கொண்டு சென்ற பாரவூர்தி ஒன்று நேற்று முன்தினம் இரவு பரந்தன் சந்திக்கும் கரடிப்போக்குச் சந்திக்கும் இடையில் தடம்புரண்டு கிடப்பதைக் காணலாம். (09)

# பெண்கள் உலகக் கிண்ண கிரிக்கெட் சுப்பர் சிக்ஸில் நுழைந்தது இலங்கை

இந்தியாவில் இடம்பெற்று வரும் மகளிர் உலகக்கிண்ணப் போட்டிகளின் சுப்பர் 6 சுற்றுக்கு இலங்கை அணி தகுதி பெற்றுள்ளது. நேற்று இடம்பெற்ற இந்திய அணிக்கெதிரான போட்டியில் 138 ஓட்டங்களால் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றே இலங்கை அணி சுப்பர் 6 சுற்றுக் தகுதிபெற்றது.

மும்பை பிரட்பேர்ண் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 282 ஓட்டங்களைக் குவித்தது.

முதலாவது விக்கெட்டை 4 ஓட்டங்களுக்கே இழந்த அவ்வணி, அதன் பின்னர் இரண்டாவது விக்கெட்டுக்காக 117 ஓட்டங்களைக் குவித்தது.

தொடர்ந்து வந்த வீராங்கனைகளும் சிறப்பாக ஆட இலங்கை அணி பலமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக தீபிகா ரசங்கிக்கா 109 பந்துகளில் 84 ஓட்டங்களையும், அணித்தலைவி ஷிகலா சிரிவர்தன 67 பந்துகளில் 59 ஓட்டங்களையும், இஷானி கௌஷல்யா 31 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங் களையும், யசோதா மெண்டிஸ் 80 பந்துகளில் 55 ஓட்டங்களை யும் பெற்றனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக ஜூலன் கோஸ்வாமி 3 விக்கெட்டுக்களையும், அமித்தா சர்மா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றிபெற 283 ஓட்டங்களையும், சுப்பர் 6 சுற்றில் தகுதிபெற ஆகக்குறைந்தது 251 ஓட்டங்களையாவது பெற வேண்டுமென்ற இலக்கோடு களமிறங்கிய இந்திய அணி 42.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 144 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 138 ஓட்டங்களால் படு தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பாக ரீமா மல்கோத்ரா 51 பந்துகளில் 38 ஓட்டங்களையும், திருஷாகாமினி 22 ஓட்டங்களையும், அணித்தலைவி மிதாலி ராஜ் 20 ஓட்டங்களை[illegible] பெற்றனர்.

பந்துவ[illegible] இலங்கை அணி சார்பாக அணித்தலைவி ஷிகலா சிரிவர்தன, சாமனி செனவிரத்ன ஆகியோர் தலா 2 விக்கெட்டுக் களையும், இஷானி கௌஷல்யா, உதேஷிக்கா பிரபோதனி, ஸ்ரீபாலி வீரக்கொடி, இனோக்கா ரனவீர, சன்டமாலி தொலவட்டே ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் முடிவு காரணமாக குழு 'ஏ' இலிருந்து இங்கிலாந்து, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் சுப்பர் 6 சுற்றுக்குத் தகுதிபெற்றுள்ளன. குழு 'பி' இலிருந்து அவுஸ்ரேலிய, நியூசிலாந்து, தென்னாபிரிக்க அணிகள் தகுதி பெற்றுள்ளன.

# ஆணின் சடலம் மீட்பு

(வவுனியா)

ஆணொருவரின் சடலத்தை வவுனியா பொலிஸார் நேற்று செவ்வாய்க்கிழமை காலை மீட்டுள்ளனர்.

வவுனியா, செல்வாநகர் செக்கடிப்புலவு பகுதியைச் சேர்ந்த வடிவேல் செல்வகுமார் (வயது-51) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வவுனியாவிலுள்ள சாளம்பைக்குளம் வயல் வெளியிலிருந்தே இச் சடலத்தை மீட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணையை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# தலைமைத்துவ பயிற்சி அடுத்த வாரம் ஆரம்பம்

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவ்ர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியின் மூன்றாம் கட்டம் இம்மாதம் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. உயர்கல்வி அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பன இணைந்து இந்தத் திட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது.

பெப்ரவரி 28 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள மூன்றாம் கட்ட தலைமைத்துவ பயிற்சியில் பங்கேற்க 7 ஆயிரத்து 38 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு பயிற்சி அளிக்கவென நாடு முழுவதும் 28 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விபரங்களை WWW.leadership.mohe.gov.lk என்ற இணையத்தளத்தில் பார்வையிட முடியும் என உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இதுவரை தலைமைத்துவ பயிற்சியில் பங்கேற்காத மாணவர்களுக்கு நான்காம் கட்டப் பயிற்சி நடவடிக்கையை ஆரம்பிக்க வுள்ளதாக அமைச்சு அறிவித் துள்ளது.

# ஆப்கானிஸ்தானில் பணியாற்ற படைகளுக்கு வாய்ப்பு இல்லை

ஆப்கானிஸ்தானில் அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டு வரும் அமெரிக்கத் துருப்பினருக்கு உதவியாக இலங்கைப் படையினரை அனுப்பிவைக்குமாறு அமெரிக்கா கோரவில்லை என ஜனாதிபதி பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

தலிபான் தீவிரவாதிகளினால் போராட்டம் நடத்தப்பட்டு வரும் ஆப்கானிஸ்தானில் அமைதி காக்கும் பணிகளில் இலங்கைப் படையினரை ஈடுபடுத்துவதை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிராகரித்தார் என அரசாங்க ஊடகங்களில் தகவல் வெளியிடப்பட்டது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இந்தக் கோரிக்கையை விடுத்ததாகவும் அதனை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிராகரித்தாகவும் தெரிவிக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டு இறுதியில் 50 நாடுகளைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 20 ஆயிரம் நேட்டோ படையினர் ஆப்கானிஸ்தானில் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர்.

நேட்டோ படையினர் 2014 ஆம் ஆண்டளவில் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறத் தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. இதேவேளை, ஜனாதிபதி மகிந்த ராஜபகஷவிடம் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் இலங்கைப் படையினரை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பிவைக்குமாறு கோரவில்லை எனவும், அதனை ஜனாதிபதி நிராகரிக்கவும் இல்லை எனவும் ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

# தமிழக மீனவர் மீது கடற்படை தாக்குதல்

இலங்கைக் கடற்படையினர் தம்மைத் தாக்கியதாக தமிழக மீனவர்கள் மீண்டும் குற்றம் சுமத்தியுள்ளனர். கச்சத்தீவுக்கு அருகாமையில் இலங்கைக் கடற்படையினர் தம்மைத் தாக் கியதாக தமிழக மீனவர்கள் தெரிவித் துள்ளனர். ராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த 12 மீனவர்களே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்படையினர் தம்மை குண்டாந் தடிகளினால் தாக்கியதாகக் குற்றம் சுமத்தியுள்ளனர். மீன்பிடி வலைகள் சேதப் படுத்தப்பட்டதுடன், பிடித்த மீன்களை கடற்படையினர் கடலில் வீசியதாகவும் தெரிவித்துள்ளனர். இதேவேளை, இந்தத் தாக்குதல் சம்பவங்களை இலங்கை கடற்படையினர் நிராகரித்துள்ளனர்.

# மூடநம்பிக்கையை உடைக்கும் அச்சுவேலி பொங்கல் விழா



(ஆவரங்கால்)

அச்சுவேலி தெற்கு நவோதயா சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் பொங்கல் நிகழ்வு ஒன்று .ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணியளவில் ஞான வைரவர் ஆலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வானது விதவைகளை மையமாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டமை இவ்விழாவின் முக்கிய அம்சமாகும்.

சமூகத்தால் ஒதுக்கப்பட்ட, கணவனை இழந்த பெண்களை முன்னிறுத்தி எந்தக் காரியங்களும் செய்வது இல்லையெனக் கருதும் இவ் சமூகத்தில் இவர்களை இணைத்து எந்த சுப காரியங்களையும் செய்ய வேண்டும் என்பதே இவ்விழாவின் கருப்பொருளாகும். (15)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 பெப்ரவரி 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.